Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 06
வியாழக்கிழமை 02 டிசெம்பர் 2021
கார்த்திகை 16 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை: 30/=

## தொற்று 744 சாவு 26

கொழும்பு, டிசெ. 2
இலங்கையில் நேற்று 744 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 14



# காணி அளவீட்டை தடுத்தால் சட்டநடவடிக்கை பாயுமாம்!

## எச்சரிக்கிறார் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 2
வடக்கில் மேற்கொள்ளப்படும் சட்டரீதியான காணி அளவீடுகள் மற்றும் அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் இடையூறு விளைவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டியேற்படும் என்று- வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வடக்கில் மக்களின் காணிகளை படைகளுக்குத் தாரைவார்க்கும் செயற்பாடுகளாகவே காணி அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்குஅந்தந்தப் பகுதி மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் எதிர்ப்புத் தெரிவிப்பதோடு, காணிகளை அளவிடும் செயற்பாடுகளுக்கு மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து போராட்டங்களிலும் காணி 14



## நேற்றும் 6 இடங்களில் சிலிண்டர் வெடிப்பு

யாழ்ப்பாணத்தில் 3 வீடுகளில்

யாழ்ப்பாணம், டிசெ. 2
யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல இடங்களிலும் நேற்று மாத்திரம் ஆறுக்கும் மேற்பட்ட இடங்களில் சிலிண்டர் வெடிப்புச் சம்ப 14

## சிலிண்டர்கள் வெடிப்பு அறிக்கையின் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை

யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 2
யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் மாவட்ட பாவனையா 13

## தலைமன்னார் பாடசாலையில் 12 மாணவருக்கு கொரோனா

மன்னார், டிசெ. 2
தலைமன்னார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 12 மாணவர்கள் 3 பெற்றோர் என 15 பேருக்கு நேற்று கொரோனாத்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது- என்று மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.
தலைமன்னார் மருத்துவ மனை 14

## வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக காணி சுவீகரிப்பை எதிர்த்து உரிமையாளர்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், டிசெ. 2
மாதகலில் மக்களின் காணிகளை கடற்படையினருக்கு வழங்கும் நோக்கில், குறித்த காணிகளை அலுவலர்கள் அளவீடு செய்வதற்கு எதிர்ப்புத்தெரிவித்து, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுமதியம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. 14

## கோவிலில் பணம் திருடி நகைசெய்தவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 2
கோவில்களில் திருடிய பணத்தில், ஒரு பகுதியில் தனக்கு நகைசெய்து அணிந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டில் நாவற்குழியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரது உடைமையிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க ஆபரண 14

## முல்லை. ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தவில்லையாம்

இராணுவத் தலைமையகம் அறிக்கை

கொழும்பு, டிசெ. 2
முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில் மாவீரர்தினமன்று, ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உண்மைகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன என்று 13

## இன்று திறக்கப்படுகிறது ஆரியகுளம் திடல்




யாழ்ப்பாணம், டிசெ. 2
யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் "தூய நகரம்" திட்டத்துக்கு அமைவாக, தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் வா.தியாகேந்திரனின் நிதி 14

## இளம்குடும்பஸ்தர் அடித்துக்கொலை!

நண்பர்களுக்கிடையேயான கைகலப்பு சோகத்தில் முடிந்தது

கிளிநொச்சி, டிசெ. 2
இளம் குடும்பஸ்தர் ஒருவர், அடிகாயங்களுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் சிகிச்சையளிக்கப்பட்டபோதும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரி 14

## டொலருக்கு 10 ரூபா! வழங்குகிறது மத்திய வங்கி

கொழும்பு, டிசெ. 2
இலங்கையிலுள்ள வங்கிகள் மற்றும் ஏனைய முறைசார்வழிகள் ஊடாக இலங்கை ரூபாவாக மாற்றும் ஒவ்வொரு 14

## ஆளுநருடனான- சந்திப்பு நிறுத்தம்; மக்கள் குழப்பம்!

யாழ்ப்பாணம், டிசெ. 2
வடக்கு மாகாண ஆளுநருடன் மாதகல் காணி உரிமையாளர்கள் நேற்று சந்திப்பு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், திடீரென அந்தச் சந்திப்பு நிறுத்தப்பட்டது. அதனால், வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக, குழப்பமான நிலை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. 14

## சிவாச்சாரியார் கொரோனாவால் சாவு!



வவுனியா, டிசெ. 2
வவுனியா, குடியிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் கோவிலின் பிரதம குருக்களும், வவுனியாவின் மூத்த சிவாச்சாரியருமான கணபதிசித்தர் சிவஸ்ரீ க.கந்தசாமிக் குருக்கள் (வயது - 71) கொரோனாவால் நேற்று அதிகாலை 13

## புலிகளின் தங்கம் தோண்ட முயன்ற இரு அமைச்சுக்களின் செயலர்கள்!

சி.ஐ.டி. விசாரணை வளையத்துக்குள்

கொழும்பு, டிசெ. 2
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் தங்கத்தை மீட்க முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில், அமைச்சரவை அந் 14

## பிரதேசசபை உறுப்பினர் சடலமாக மீட்பு



யாழ்ப்பாணம், டிசெ. 2
வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் உறுப்பினரான சுப்பிரமணியம் சிவபாலன் (வயது-51) நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி தனங்களப்பு அறுகுவெளியில் வெளிநாட்டவர் ஒருவருடைய தென் 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிவாயு சிலிண்டர் வெடிக்கும் விவகாரம்

# அச்சத்துடன் வாழவேண்டிய அவல நிலையில் மக்கள்!

## கயந்த கருணாதிலக ஆதங்கம்

**கொழும்பு, டிசெ. 2**

**'போர்க்காலத்தில் குண்டுகள் வெடிக்கும் என்று வெளியில் செல்வதற்கு அச்சமடைந்ததைப் போன்று, இப்போது வீட்டுக்குள் எப்போது எரிவாயு சிலிண்டர் வெடிக்குமோ என்று அச்சத்துடன் மக்கள் வாழ வேண்டியேற்பட்டுள்ளது இவ்வாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நாடு மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு இந்த அரசால் தள்ளப்பட்டுள்ளது. போர் நிலவிய காலத்தில் கூட இந்தளவுக்கு வாழ முடியாத நிலைக்கு மக்கள் முகம்கொடுக்கவில்லை.

போர்க்காலத்தில் வீதிகளிலும், பஸ்கள் மற்றும் ரயில்களிலும் பயணிப்பதற்கு மக்கள் அச்சப்பட்டனர். அதேபோன்று இப்போது வீடுகளில் இருப்பதற்கும் அச்சமாக இருக்கின்றது. எப்போது எரிவாயு வெடிக்குமோ என்ற அச்சம் காணப்படுகின்றது.

சமையல் எரிவாயு விலையைப் பெரியளவில் அதிகரித்து எரிவாயுக் குண்டையும் மக்கள் பக்கத்தில் அரச தரப்பினர் வீசியுள்ளனர்.

இதேவேளை, சகல பொருள்களின் விலைகள் தொடர்பாக கறுப்புச் சந்தை வியாபாரிகளுக்குத் தீர்மானம் எடுக்க அனுமதியளித்துவிட்டு தினசரி விலைகளைப் பெரியளவில் அதிகரிக்கின்றனர்.

இந்த அரசு வந்த நாள் முதல் மக்களின் சமையல் அறைகளின் மீதே தாக்குதல் நடத்தியது - நடத்தி வருகின்றது - என்றார்.

(ம-22)

## பாடசாலை அதிபர் தாக்கியதில் மாணவனின் காதுக்குப் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

பாடசாலை அதிபர் தாக்கியதில், மாணவன் ஒருவனின் காதின் செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தீவக வலயப் பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் அதிபரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

உயர்தரம் மற்றும் சாதாரண தர மாணவர்களிடையே மோதல் இடம்பெற்றது. அதில் ஒரு மாணவனுக்கு தலையிலும், மற்றொரு மாணவனுக்கு முகத்திலும் காயம் ஏற்பட்டது. எனவே அவர்கள்ள அழைத்து விசாரணை் மேற்கொண்டேன். நான் ஒரு மாணவனை அழைத்து உண்மையைச் சொல்லுமாறு கூறினேன். அவர் எதுவும் பேசவில்லை. அதனால் ஒரு கட்டத்தில் அவரைக் கையால் தாக்கினேன். அவரது கன்னத்தை நோக்கியே கையால் அடித்தேன். அவர் உயரம் குறைவு என்பதால் அடிக்கும் போது காதில் பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் இணக்கம் காணப்பட்டது. வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகளும் விசாரணை மேற்கொண்டனர்.

அவர்கள் என்ன தண்டனை தந்தாலும் நான் ஏற்பேன். -என்றார். (ஒ-4-319)



## மண் அகழ்வு

சாவகச்சேரி, டிசெ.2

தென்மராட்சி ஜே/ 301 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட தம்புதோட்டம் ஊர் எல்லை வீதியில் சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெற்றுள்ளது.

பிரதேச மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் வீதியிலும் வீதிக்கு அருகாமையில் உள்ள தோட்டக் காணிகளிலும் சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெறுகின்றது.

இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறுவதனால் ஊர் மக்கள் இராணுவத்தினரின் உதவியை நாடியுள்ளனர். (ஒ-ரி1-27)

## மனைவியை மீட்டுத் தருமாறு கோபுரத்தில் ஏறியவர் கைது

வவுனியா,டிசெ.2

தனது மனைவியை மீட்டுத் தரக் கோரி 200 அடி உயர தொலைதொடர்புக் கோபுரத்தில் ஏறியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வவுனியா தேக்கவத்தைப் பகுதியைச் சேர்ந்த குறித்தநபர் மல்லாவிப் பகுதியைச் சேர்ந்த பெண்ணை கடந்த ஜூலை மாதம் பதிவுத் திருமணம் செய்திருந்தார்.

எனினும் சில நாள்களின் பின்னர் பெண்ணின் வீட்டார் வந்து அவரை அழைத்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸில் கணவன் முறைப்பாடு செய்திருந்தார்.

தனது மனைவியை பொலிஸார் இன்னும் மீட்டுத் தரவில்லை என்று தெரிவித்து அவர் வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம் முன்பாக கற்குழிப் பகுதியில் அமைந்துள்ள 200 அடி உயரமான தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஏறி தற்கொலை செய்யப்போவதாக போராட்டத்தில் ஈடுபட்டார்.

சுமார் மூன்று மணித்தியால போராட்டத்தை அடுத்து, பொலிஸாரும், உறவினர்களும் இணைந்து ஒலிபெருக்கி மூலம் வாக்குறுதி வழங்கி, அவரைக் கீழே இறக்கினர்.

இந்த நிலையில் தொலைத்தொடர்புக் கோபுர அதி உயர் வலையத்துக்குள் சென்றமை, தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஏறி அதனைச் சேதப்படுத்தியமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குறித்த நபரைப் பொலிஸார் கடந்த 29 ஆம் திகதி கைது செய்துள்ளனர். (ஒ-4-18)

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு, டிசெ.2

சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தில், தொழில்சார் வாண்மைத்துவ கணக்கியலில் முதுமாணிப்பட்ட கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை, டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை , www.mgt.sjp.ac.lk/acc/mpaccc என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ஒ-ரி1)



வவுனியா பழைய சுந்தரபுரம் கிராமத்தில் வசிக்கும் வடிவேல் சுரேஸுக்கு, இராணுவத்தினரால் நேற்று புதன்கிழமை வீடு வழங்கப்பட்டுள்ளது. 15 ஆவது சிங்க றெஜிமென்ட் படைப் பிரிவினரின் வேலைத்திட்டத்தின்கீழ், 4.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டது. இந்த வீடு, சோபிததேரர் மற்றும் வவுனியா வர்த்தகர் மயூரதன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் வழங்கி வைக்கப்பட்டது. (ஒ-ரி1-110)

## 50 வருடங்களுக்குப் பின்னர் பிரதான வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

50 வருடங்களுக்கு மேலாக குண்டும் குழியுமாகக் காணப்பட்ட புங்குடுதீவு பிரதான வீதி றோமாஸ் ஸ்றோர்ஸ் சந்தி புனரமைக்கப்பட்டுள்ளது.

சூழலியல் மேம்பாட்டு அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவலனின் முயற்சியால், 20 லட்சம் ரூபா செலவில் குறித்த வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினரால் குறித்த வீதி புனரமைக்கப்பட்டுள்ளது . [illegible]ணிப்போர் இந்த வீதி [illegible]றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலை ஆசிரிய பயிற்சியை மேற்கொள்ளாதோருக்கு வாய்ப்பு

## ஆசிரிய நியமனம் பெற்றால் தகைமை

யாழ்ப்பாணம், டிசெ. 2

ஆசிரிய கலாசாலைகளுக்கான புதிய கல்வியாண்டுக்கான அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைகள் நிறைவடைந்துள்ளபோதிலும் கொரோனா நிலைமை காரணமாக விண்ணப்பிக்கத் தவறியோருக்கு, நேரடியாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் நேர்முகப் பரீட்சையில் உரிய ஆவணங்களுடன் கலந்துகொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களைப் போலல்லாது பட்டதாரிகள் அல்லாத க.பொ.த. சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் போதிய தகைமை பெறாவிடினும் நிரந்தர ஆசிரியருக்கான நியமனக் கடிதத்தைக் கொண்டிருந்தால் இந்த ஆண்டு ஆசிரிய பயிற்சிக்கு உள்வாங்குவதற்கான அனுமதியைக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது. இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ள குறைந்தபட்சத் தகைமையைப் பயன்படுத்தி இதுவரை பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சியை மேற்கொள்ளாதவர்கள் இருப்பின் உடன் அருகில் உள்ள கலாசாலை அதிபர்களோடு தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த)

# இந்தியப் படகுகளுக்கு எதிராக 10,000 கையெழுத்துவேட்டை

## கிளிநொச்சியில் நேற்று ஆரம்பம்

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய நுழைவுக்கு எதிராக 10 ஆயிரம் கையெழுத்துக்களைச் சேகரிக்கும் நடவடிக்கை கிளிநொச்சி - நாச்சிக்குடா சந்தி மற்றும் இரணைமாதாநகர், கடற்கரை போன்றவற்றில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தக் கையெழுத்து பத்திரம், ஜனாதிபதி, சட்டமா அதிபர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு கையளிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் கையெழுத்துகள் பெறப்படவுள்ளன. எதிர்வரும் நான்காம் திகதி மனித உரிமை தினத்தில் உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (சு-214)

திருமறைக் கலாமன்ற

# 57 ஆம் ஆண்டின் நிகழ்வுகள் நாளை

யாழ்ப்பாணம், டிசெ. 2

திருமறைக் கலாமன்றத்தின் 57 ஆவது ஆண்டின் ஆரம்பத்தையும், ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரியசேவியர் அடிகளாரின் 82 அகவையையும் நினைவுகூர்ந்து திரு மறைக் கலாமன்றத்தால் பல நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி காலை 6.30 மணிக்கு இல.17 மார்ட்டீன் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைஞானசுரபி தியான இல்லத்தில் நன்றி வழிபாடும், முற்பகல் 9.30 மணிக்கு இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது மணி மண்டபத்தில் குருதிக்கொடையும் நடைபெறும்.

மாலை நிகழ்வாக அமரர் நீ.மரியசேவியர் அடிகளாரை அவரது பிறந்தநாளில் நினைவுகூரும் முகமாக 'மரிய சேவியர் அடிகளாரின் நினைவுகளுடன் சிறு பொழுது...' என்னும் நிகழ்வு மாலை 5 மணிக்கு இல. 286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும்.

இந்தநிகழ்வுகளில் அனைவரையும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (த)

# சுற்றுலாவிகளைக் கவர்வதற்கு அரசு யோசனை

கொழும்பு, டிசெ. 2

அதிகளவான சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு, அரசு பல்வேறு திட்டங்களைப் பரிசீலித்து வருகின்றது என்று ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாலைதீவுக்கு வருவதைப்போன்று, புதிய சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு வரவழைப்பதும், பிரபல முகவர்கள் மூலம் சுற்றுலாக் குழுக்களை அழைத்து வருவதும் எனது நோக்கமாகும்.

கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதை அடுத்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கையை நாளுக்குநாள் அதிகரிக்க வேண்டும்.

வாராந்தம் சுமார் 800 சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு கொண்டுவருவதற்குத் திட்டமிட்டு வருகின்றோம் - என்றார். (ம)



# 2022 கல்வியாண்டு ஏப்ரலில் ஆரம்பம்!

2022ஆம் ஆண்டின் முதலாம் தவணை ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 2021ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளின் மூன்றாம் தவணை 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா கடந்த 26ஆம் திகதி விடுத்துள்ள சுற்றறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


# மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 08 . 1937

மறைவு 30 . 11 . 2021

## ஏபிரகாம் கிளாறம்மா (நவமணி)

இல. 05, அடப்பன் வீதி 3ம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஏபிரகாம் கிளாறம்மா (நவமணி) 30.11.2021 காலமானார்.

அன்னார் ஞானப்பிரகாசம் சேவியர் ஏபிரகாம் (ராசு) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜேட்றூட் சூசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் லோறன்ஸ் தம்பி ஏபிரகாம் அக்னஸ் ஏபிரகாம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜேசுதாசனின் அன்புச் சகோதரியும் ஜெனற் பெற்றனிலா, ஜெசியா றெறன்சியா, பெனற் எட்வின், மேவின் லெஸ்லி ஆகியோரின் அன்புத் தாயாரும், றெஜினோல்ட், அருள்தாசன், அன்ரனிற்றா, கிறிஸ்ரா தாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும் காமலின், சந்துரு, ஸ்ரெபியா, சரோலின், தருணி, றவிஷா, தாரவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.12.2021) வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு :-
சூட்டி (மகள் - 021 222 9261 இலங்கை)
சசி (மகள் - 0016 4771 06605 - கனடா)

தகவல்:
குடும்பத்தினர்

(cs 41377) (2.6)


# விபத்தில் சிக்கியோருக்கு இழப்பீடு அதிகரிப்பு

## அடுத்தவருடம் நடைமுறைக்கு வருகிறது

கொழும்பு, டிசெ. 2

காரணம் தெரியாத வீதி விபத்துக்களில் உயிரிழப்போரின் குடும்பத்தார் மற்றும் பலத்த காயமடைந்தோருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்க போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது வழங்கப்படும் தொகையை 50 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, விபத்துக்களில் உயிரிழப்போரின் குடும்பத்தாருக்கு இதுவரை வழங்கப்பட்ட 2 இலட்சம் ரூபா இழப்பீட்டு தொகை இனி இரண்டரை இலட்சம் ரூபாவாக செலுத்தப்படும். காயமடைவோருக்கு வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபா இழப்பீட்டை இனி ஒன்றரை இலட்சம் ரூபா வரை அதிகரிக்கவும் தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் இந்தத்தீர்மானம் நடைமுறைக்குவரும் என்று போக்குவரத்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 50 ஏக்கர் நெற்பயிர்கள் யானைகளால் அழிப்பு

**கிளிநொச்சி,டிசெ.2**

**50 ஏக்கர் வரையான நெற்பயிர்கள் யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன என்று அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆனைவிழுந்தான்காடு வழியாக ஸ்கந்தபுரம் வயல் நிலங்களுக்குள் புகுந்த யானைகள் 50 ஏக்கர் வரையான நெற்பயிர்களை அழித்துள்ளன. இது தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகளுக்கு கமநல சேவை நிலையம் இழப்பீடுகளைப் பெற்றுத் தருவதற்கும் யானைகளைத் தூர இடங்களுக்கு துரத்திச் சென்று விடுவதற்கான நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். விவசாயத்தைப் பாதுகாக்க மாவட்டச் செயலகம், கரைச்சி பிரதேச செயலகம் என்பன நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஒ-4-13)



# ஏபி, பி குருதி மாதிரி உடையோருக்கு கொரோனாத் தொற்று வாய்ப்பு அதிகம்!

புதுடெல்லி, டிசெ. 2

டெல்லியில் உள்ள மருத்துவமனையொன்றில் நடத்தப்பட்ட பரிசோதனையொன்றில் ஏபி, பி குருதி மாதிரிகளை உடையவர்களுக்குக் கொரோனா தொற்றுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சுமார் 2 ஆயிரத்து 500 பேரை வைத்து, மேற்கொள்ளப்பட்ட ஆய்விலேயே இந்தத் தகவல் வெளிப்பட்டுள்ளது. (ம)

# நகைகள் திருட்டு சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.2

தங்க ஆபரணங்களைத் திருடினார் என்ற சந்தேகத்தில் தேடப்பட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பொலிஸ் பிரிவில் கிராம அலுவலர் ஒருவரின் சங்கிலியைத் திருடியதுடன் மூதாட்டி ஒருவரைக் கட்டி வைத்து தங்க ஆபரணங்களைக் கொள்ளையடித்தனர் என்ற சந்தேகத்தில் மூவரை பொலிஸார் தேடி வருகின்றனர். இந்தச் சம்பவங்களில் ஏழரைப் பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் அளவெட்டி பத்தானைப் பகுதியில் நடமாடுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் ஏற்கனவே கொலை வழக்கில் பிணை வழங்கப்பட்டு, மேலதிகமாக இரண்டு வழக்குகளுடன் தொடர்பில் உள்ளவர். குறித்த சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கிராம அலுவலரிடம் இருந்து திருடப்பட்ட அரைப் பவுண் சங்கிலி மீட்கப்பட்டது.

சந்தேகநபர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஒ-4-125)



# எய்ட்ஸ் விழிப்புணர்வு: வவுனியாவில் ஊர்வலம்

வவுனியா, டிசெ.2

உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு "சமத்துவமின்மையை ஒழிப்போம், எய்ட்ஸை ஒழிப்போம், பெருந்தொற்றை ஒழிப்போம்" எனும் தொனிப் பொருளில் எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் கருத்தரங்கு என்பன வவுனியாவில் நேற்று இடம்பெற்றன.

மாவட்ட பாலியல் நோய் சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், எய்ட்ஸ் பரவும் முறைகள் மற்றும் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. ஊர்வலத்தில் விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்களும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

பாலியல் நோய் சிகிச்சை நிலையப் பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி கே.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைப் பணிப்பாளர் இ.ராகுலன், பிரதிப் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (மி-1-18-110)




**எந்த விசயத்தை தொடங்கினாலும், அதுக்கு எதிராக் கருத்துச் சொல்லுறதும் கற்பனையில களமாடுறதும், அப்பிடி ஒரு விசயத்தை நடக்கவிடாமல் தடை போடுறதும் தான் எங்களுக்கு கைவந்த பழக்கம். ஆரியகுளத்தை திருத்தி, சனங்கள் பார்த்து ரசிக்கிற ஒரு இடமா மாத்துறத்துக்கு மாநகரசபை போட்ட திட்டத்துக்கும் இப்பிடித்தான் எதிர்ப்பு வந்திச்சு. முதலில அதைத் திருத்துறதுக்கு காசு குடுக்கிறவர் ஆமிக்கு சப்போட் எண்டும், இதையும் ஆமிதான் செய்விக்குது எண்டும் கதை வந்திச்சு. ஆனால் அது பெரிசா எடுபடேலை. அப்பா என்ன சொன்னால் இந்த விசயம் பத்தி எரியும் எண்டு ரூம் போட்டு யோசிச்ச சில 'வயிறுபுகைஞ்சான்கள்' இட்டுக்கட்டின விசயம் தான் ஆரியகுளத்துக்கு நடுவில பௌத்த சின்னங்களோட ஒரு மண்டபம் வரப்போகுது எண்ட கதை.**

**அப்பிடி ஒரு விசயத்துக்கு நாகவிகாரைப் பிக்கு கடிதம் போட்டவர்தான். ஆனால் அதுக்கு மாநகநசபையின்ர மேயர் மணி, மாட்டன் எண்டிட்டார். இது வடிவா தெரிஞ்சபிறகும் அந்தக் கடிதத்தை தூக்கிப் பிடிச்சு, பிக்குவும் மணியும் கூட்டுச் சதி செய்து ஏதோ ஆரிய குளத்தையே பௌத்தமயமாக்குகினம் எண்ட ரேஞ்சுக்கு கதைகள் கண்டபக்கத்தாலையும் கிளம்பத் தொடங்கிச்சு. அப்பதான் அதே நாகவிகாரையின்ர பிக்கு, தன்ர திட்டத்துக்கு 'மணி' மாட்டன் எண்டு சொல்லிப் போட்டா ரெண்ட கோபத்தில, தாறுமாறாப் பேசி எழுதின இன்னொரு கடிதம் போட்டார். மணியும், பிக்கும் கூட்டுச்சதி எண்டால் எதுக்கு இப்பிடி ஒரு கடிதத்தை பிக்கு எழுதோனும்? எண்டு சனங்கள் யோசிக்கத் தொடங்கிச்சினம். அப்பதான் அவைக்கு மேயர் மணி செய்யிற வேலையைக்குழப்பத்தான் இப்பிடியெல்லாம் சில 'வயிறுபுகைஞ்சான்கள்' கதைகட்டியிருக்கினம் எண்டது தெரிஞ்சுது.**

**அதுக்குப் பிறகு தாங்கள் எது சொன்னாலும் அது அம்பலமேறாது எண்டதால அந்த 'வயிறுபுகைஞ்சான்கள்' கப்சிப் எண்டு இருந்திட்டினம். அதால எந்தத் தடங்கலுமில்லாமல் ஜெட் வேகத்தில வேலையள் நடந்து. இண்டைக்கு 'ஆரியகுளம் மகிழ் திடல்' எண்டு பேரும் வைச்சு திறந்து வைக்கிற அளவுக்கு வந்திட்டு. லைற்றெல்லாம் சுத்தி வரப்போட்டு, நடுவுக்க தண்ணியெல்லாம் பீய்ச்சியடிச்சு அருவி மாதிரி பொங்கிக் குதிக்கிறதைப் பார்க்க உண்மையா இது எங்கட பழைய ஆரியகுளம் தானோ? எண்டு நம்பேலாமல் கிடக்கு. இப்பிடி ஒரு நல்ல திட்டத்தை குழப்ப நினைச்சவையை என்னெண்டு சொல்லுறது?**

**கடைசியா ஒரு பின்குறிப்பு. இண்டைக்கு மகிழ் திடலை திறந்து வைக்கிறதுக்காக நேற்று இரவோடு இரவா, குளத்துக்கு மேல வளர்ந்து வந்து இலையெல்லாம் கொட்டிக் கொண்டிருந்த அரசமரத்தை மாநகரசபை வெட்டிப் போட்டுது. சிலவேளை தான் சொன்னதை மணி கேக்கேலை எண்ட கடுப்பில இருக்கிற நாகவிகாரைப் பிக்கு, அரசமரக் கொப்பை வெட்டினதை வைச்சு இண்டைக்கேதும் புதுப்பிரச்சினையைக் கிளப்பிறாரோ தெரியேலை.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இறக்குமதி அரிசியில் இல்லையா இரசாயனம்?

இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கு விதித்த தடை காரணமாக செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட உரத் தட்டுப்பாட்டால் இலங்கையில் நெல் உற்பத்தி குறைந்துள்ள நிலையில், மியான்மரில் இருந்து 20 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானித்துள்ளது கோத்தாபய அரசு. இந்த அரிசி இறக்குமதியின் பின்னணியில் சில விடயங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மியான்மர் ஒன்றும் செல்வச் செழிப்பும் பொருளாதார வளமும் சர்வதேச நற்பெயரும் பெற்ற நாடல்ல. ஆங் சாங் சூச்சியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, கடந்த பெப்ரவரி மாதம் முதல் அங்கு இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்த மியான்மர் இராணுவத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில்கண்டனத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் மியான்மருக்கு எதிராகப் பல்வேறுபட்ட பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இப்படிப்பட்ட ஒரு நாட்டிடம் இருந்துதான் அரிசியைக் கையேந்தியுள்ளது இலங்கை.

இலங்கையைப் போலவே மியான்மரிலும் ''பௌத்த பேரினவாதம்'' என்ற எழுதப்படாத சித்தாந்தம்தான் அனைத்தையும் தீர்மானித்துக் கொண்டிருக்கின்றது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முதல் ரக்கினே மாகாணத்தில் வசித்த சிறுபான்மை இனமான ரொஹிங்யர்கள் மியான்மர் இராணுவத்தால் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டனர். 'ரொஹிங்யர்களுக்கு எதிரான மியான்மர் அரசின் நடவடிக்கைகளும் பௌத்தத் திணிப்பும் இனவழிப்புக்கான பாடப்புத்தகம்போன்று உள்ளன' என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரெஸ் தனது கண்டனத்தையும் அதிருப்தியையும் தெரிவித்திருந்தார். சிலவேளைகளில் மியான்மர் இராணுவத்தின் இந்தச் சித்தாந்தத்தால் கவரப்பட்டதால் மேற்படி வணிகத்துக்கு இலங்கை சென்றிருக்கலாம்.

இலங்கையில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் இனப்படுகொலைகளுக்கு எதிரான விசாரணைகளுக்கு சீனா எப்படி முட்டுக்கட்டைபோட்டு, இலங்கையைப் பாதுகாக்கின்றதோ, அதேபோன்று ரொஹிங்யர்களுக்கு எதிராக இடம்பெற்றதாகச் சொல்லப்படும் இனப்படுகொலைகளுக்காக மியான்மர் தண்டிக்கப்படுவதற்கு எதிராகவும் சீனா மறைமுகமாகச் செயற்படுகின்றது என்பதும் உலகறிந்த உண்மை. ஆக, சீனாவுடன் சார்ந்த ஒரு விடயமாகவும் இதைக் கொள்ளலாம். இன்னும் சுருக்கமாகச் சொல்வதானால், ஒரு குற்றவாளி இன்னொரு குற்றவாளியைக் காப்பாற்ற எத்தனிக்கும் கைங்கரியம்.

இத்தனை சிக்கல்களாலும், சர்வதேசப் பொருளாதாரத் தடைகளாலும் மியான்மரின் பொருளாதாரமே அதலபாதாளத்தில் சென்றுகொண்டிருக்கையில் மியான்மரிமிடமிருந்தே இலங்கை அரிசி இறக்குமதி செய்வதை என்னவென்று சொல்வது? பிச்சைக்காரனிடம் பிச்சை கேட்ட கதையென்று இதைத்தான் சொல்வார்கள்.

இலங்கையில் இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கு அரசு தடைசெய்தபோது, டொலர் பற்றாக்குறையாலேயே இந்தத் தடை என்று – எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியது. ஆனால், அரசோ மக்களின் நலனைக் கருத்திற்கொண்டுதான் இந்தத் தடையென்றும் இயற்கையான உரத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில்தான் அரசு செயற்படுகின்றது என்றும் – சப்பைக் கட்டு கட்டியது. கேள்வி என்னவென்றால், மியான்மரில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி எந்த உரத்தில் உற்பத்தி செய்யப்பட்டது? அது இயற்கை உரத்தில் உற்பத்தி செய்யப்பட்டது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஒருவேளை மியான்மர் அரிசி இரசாயன உரத்தைப் பயன்படுத்தி விளைவிக்கப்பட்ட நெல்லில் இருந்தே பெறப்பட்டது என்றால், தலையைச்சுற்றி மூக்கைத் தொடாமல் இலங்கை விவசாயிகளுக்கே இரசாயன உரத்தைப் பெற்றுக்கொடுத்து இங்கேயே நெல்லில் தன்னிறைவு காணலாமே! 'மாதனமுத்த' மரபில் வந்த குடும்பம் ஆட்சி செய்தால் இப்படித்தான் முடிவுகளை எடுத்து, தாமும் குழம்பி, மக்களையும் குழப்பி, நாட்டையும் குழப்புவார்கள்.



நினைவேந்தலை அனுமதிக்காத சிங்கள அரசு

# தன்மானத்துடன் வாழும் உரிமையை தமிழ் மக்களுக்கு எவ்வாறு வழங்கும்?

## அன்புமணி இராமதாஸ் கேள்வி

**சென்னை, டிசெ. 2**

**இலங்கையில் மாவீரர்நாள் நிகழ்வுகளை சிங்களப் படை சிதைத்ததை மன்னிக்கமுடியாது. விடுதலைப் போரில் உயிர்த்தியாகம் செய்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்துவதைக்கூட பொறுத்துக்கொள்ள முடியாத சிங்கள அரசு, ஈழத் தமிழர்களுக்கு சம உரிமைகளையும், தன்மானத்துடன் வாழும் உரிமையையும் எவ்வாறு வழங்கும்? என்ற கோணத்தில்தான் இந்தச் சிக்கலை அணுக வேண்டும் என்று தெரிவித்துள்ளார் பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி இராமதாஸ்.**

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த நவம்பர் 27ஆம் திகதி தமிழீழப் பகுதிகளில் நடத்தப்பட்ட மாவீரர் நாள் நிகழ்வுகளை சிங்களப் படைகள் சிதைத்துள்ளன. ஊடகவியலாளர்கள் மீது கொடூரமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவை கண்டிக்கத்தக்கவை.

விடுதலைப் போரில் உயிர்நீத்த விடுதலைப் புலிகளின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 27ஆம் நாள் மாவீரர் நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டிலும் இந்த நிகழ்வு உலகம் முழுவதும் தமிழர்கள் வாழும் பகுதிகளில் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால், விடுதலைப் புலிகள் போராடிய, ஆட்சி செய்த பகுதிகளில் கடந்த 27ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்த மாவீரர் நாள் நிகழ்வுகளை சிங்களப் படையினர் திட்டமிட்டு, சிதைத்துவிட்டதாக வடக்கு மாநிலத்தில் வாழும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டம் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற நிகழ்வில், மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவதற்காக பொதுமக்கள் கொண்டுவந்த தீபச்சுடர்களை இராணுவ வீரர்கள் தட்டிவிட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் மாவீரர்களின் நினைவிடத்தில் வீர வணக்கம் செலுத்தவந்த தமிழ் மக்களை சிங்களப் படையினர் துப்பாக்கி முனையில் மிரட்டியுள்ளனர்.

இலங்கை இறுதிப் போருக்குப்பிறகு மாவீரர்நாள் நிகழ்வுகள் நடக்காமல் முடக்குவதை சிங்கள அரசு வாடிக்கையாக வைத்திருக்கிறது. நடப்பாண்டில் மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தாலும்கூட, அதை மதிக்காமல் சிங்களப் படைகள் தமிழர்களைத் தாக்கியும், மிரட்டியும் நிகழ்வுகளைச் சிதைத்துள்ளன. சிங்களப் படையினரின் இந்தத் தாக்குதல்களைத் தனித்த நிகழ்வாகப் பார்க்க முடியாது - என்றுள்ளது. (ம)

# ஊடக சுதந்திரத்தைப் பறிக்க இடமளியோம்

## கூட்டமைப்பு கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி, அவர்களது ஊடக சுதந்திரத்தைப் பறிக்க இடமளிக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஷ்வச்சந்திரன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை இராணுவத்தினரால் ஊடகவியலாளர் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்ட சம்பவம் கண்டனத்துக்குரியது. இந்தத் தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு பின்பு பிணையில் விடுவிக்கப்பட்டதும் வெறுமனே ஒரு கண் துடைப்பு சம்பவமாகவே நாம் காண்கிறோம். இது தொடர்பாக சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நியாயம் கிடைக்க வழிமுறைகளை முன்னெடுக்கவேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் ஊடகத்துறைக்கு பெரும் சவாலாக அமைகின்றது. அண்மைக் காலங்களில் பல்வேறு தரப்பினருக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள்போலவே இந்த சம்பவமும் நடந்துள்ளது.

தொடர்ச்சியாக நடைபெறும் இவ்வாறான விடயங்கள் குறித்து நாம் தொடர்ந்தும் அவதானமாக இருந்து, பாதிக்கப்படுவோருக்காக எப்போதும் குரல் கொடுப்போம் - என்றுள்ளது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு மா மரக்கன்றுகள் வழங்கல்

சாவகச்சேரி, டிசெ.2

சமுர்த்திப் பயனாளிகளுக்கு மாமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வசிக்கும் 5 ஆயிரத்து 702 குடும்பங்களுக்கு இந்த மாமரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இதற்கென சமுர்த்தி திணைக்களம் 15 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

கொடிகாமம் சமுர்த்தி வங்கிக்குட்பட்ட பயனாளர்களுக்கு கடந்த திங்கட்கிழமையும் சாவகச்சேரி, வரணி, கைதடி ஆகிய பிரிவுகளுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமையும் பிரதேச சமுர்த்தி அலுவலர்களால் வழங்கி வைக்கப்பட்டது. (ஒ-ரி1,9)

## அரசியல் கைதிகளை வாழ்வதற்கு விடுங்கள்

### அருட்தந்தை சக்திவேல் கோரிக்கை



வவுனியா, டிசெ. 2

**அரசியல் கைதிகளாக நீண்ட நாட்கள் தடுப்புக் காவலில் இருந்து விடுதலையானவர்களையும், ஒட்டுமொத்த தமிழர்களையும் வாழ விடுங்கள் அல்லது வழியை விடுங்கள் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

அவரால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் அனைத்து மக்களுக்கும் கருத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் என்பன உண்டு. இதனை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கும், அரச அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும், பொலிஸாருக்கும் உள்ளது.

இத்தகைய சுதந்திரமும், பாதுகாப்பும் அரசியல் கைதிகளாக சிறையில் இருந்து விடுதலை பெற்றவர்களுக்கும் முழுமையாக கிடைக்க வேண்டும். இதனை விடுத்து விசாரணை என அழைப்பு விடுப்பதும், தங்களை இரகசியப் பொலிஸாரும், புலனாய்வாளர்களும் பின் தொடர்கிறார்கள் என்று உணரச் செய்வதும் அடிப்படை உரிமை மீறல் ஆகும். இது தொடரக்கூடாது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஆட்சியாளரிடம் வேண்டுகோள் விடுக்கின்றது.

முன்னாள் அரசியல் கைதியான வவுனியாவைச் சேர்ந்த செல்வநாயகம் ஆனந்தவர்ணன் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி விசாரணைக்கென கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார். இது அரசியல் கைதியாக இருந்து விடுதலை பெற்றவர்களுக்கு பின்னால், புலனாய்வாளர்கள் கழுகு கண்களோடு உள்ளனர் என்பதை உறுதிப்படுத்துகின்றது. அரசியல் கைதிகளாக நீண்டகாலம் சிறை வாழ்க்கையை அனுபவித்த பின்னர் விடுதலையானோர் தன் குடும்ப உறவுகளோடு சந்தோஷமாகவும், சுதந்திரமாகவும் நடமாடி விடுதலையை முழுமையாக அனுபவிக்க வேண்டும். நாம் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுகின்றோம் எனும் உணர்வுக்குள் அவர்களை தள்ளுவதும், விசாரணைக்கு அழைப்பதும் அவர்களின் மகிழ்வை இல்லாதொழித்து திறந்தவெளி சிறைக்குள் நாம் இருக்கின்றோம் எனும் மனநிலையை தோற்றுவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றுள்ளது. (ம-110)

## தமிழர் தாயகத்தின் வளங்கள் தமிழர் தாயகத்துக்கே உரியன

யாழ்ப்பாணம், டிசெ. 2

மன்னாரில் எரிசக்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் நாட்டின் கடனை அடைக்க முடியும் என்ற கருத்து வலுசக்தி அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ளது. அது நல்ல விடயமே. எங்களின் தேசத்தில் கண்டுபிடிக்கப்படும் வளங்கள் மூலம் கிடைக்கும் வருமானம், எங்களின் தேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரன். நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் பகுதிகளில் கண்டுபிடிக்கப்படும் வளங்கள் மூலம் எமது மக்களும் எம் நிலங்களும் உச்சப் பயனை அடைய வேண்டும். எமது மக்கள் புறக்கணிக்கப்படுகின்ற நிலைமை தொடரக்கூடாது.

இல்மனைட் அகழப்படுகின்றது. அதனால் கிடைக்கும் வருமானம் முழுவதும் அந்தப் பிரதேசங்களுக்கு வெளியே கொண்டு செல்லப்படுகின்றது.

இந்த நிலைமை தேசங்களுக்கு இடையே இடைவெளியையே அதிகரிக்கும். காற்றாலை மின் உற்பத்தியிலும் வேலை வாய்ப்புகள் அந்தப் பிரதேசங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றார்.

இதற்குப் பதில் வழங்கிய இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் உள்ள வளங்கள் நாட்டு மக்களுக்கே உரியவை. பிரதேசங்கள் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் இனம், பிரதேச அடிப்படையில் ஒதுக்க முடியாது. ஆனால் அந்தப் பிரதேசத்துக்கு விசேட அந்தஸ்து வழங்குவது தொடர்பில் அனைவரும் கலந்துரையாடி, இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆனால் பிரதேச அடிப்படையில் அவற்றை ஒதுக்க முடியாது இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ம-22)

## ஊடகவியலாளர் தாக்கப்பட்டமைக்கு நாடாளுமன்றில் கடும் கண்டனங்கள்!

முல்லைத்தீவில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவர் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டமைக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கண்டனத்தைப் பதிவுசெய்தனர்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மின்சக்தி அமைச்சு, வலுசக்தி அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.க்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பிக்களான செல்வராசா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் தமது கடுமையான கண்டனங்களை வெளியிட்டனர். (ம-22)

## நூல் வெளியீடு

மன்னார், டிசெ.2

சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகத்தின் 'மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்' என்ற நூல் வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு, சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான நாளை வெள்ளிக்கிழமை மன்னார் நகரசபை கலாசார மண்டபத்தில் மு.ப. 10 மணிக்கு இடம்பெறும்.

மாந்தைமேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வெற்றிச்செல்வி சந்திர கலா தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அ.சகிலாபானு கலந்து கொள்வார்.

அத்துடன், நூல் வெளியீட்டு உரையை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டெ.க.அரவிந்தறாஜ், நூல் மதிப்புரையை நாணாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஒ-ரி1,60)

## உபகரணங்கள் வழங்கல்



யாழ்ப்பாணம், டிசெ.2

புங்குடுதீவு ஜே/26 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் இயங்கி வருகின்ற பனம்பொருள் உற்பத்தி சங்கத்தினருக்கு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கருணாகரன் முரளிதரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு சூழகம் அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினர் கருணா கரன் குணாளனின் ஏற்பாட்டில், 12 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அத்தோடு, பாடசாலை மாணவர்களுக்கு இம்மாதத்திற்கான அறிந்திரன் சிறுவர் சஞ்சிகைகளும் கருணாகரன் முரளிதரனின் 20 ஆயிரம் ரூபா நிதியுதவியில் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளன. (ஒ-ரி1)

## கருவி நிறுவனத்துக்கு விருது



கொழும்பு, டிசெ.2

சுவாபிமானி 2020 விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. அங்க வீனமுற்ற நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நிறுவனங்களைத் தரப்படுத்தும் வேலைத்திட்டத்தின்கீழ் சமூக சேவை திணைக்களத்தால் இந்த விருது வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 25 ஆம் திகதி வியா [illegible] இந்த விழா நடைபெற்றது.

விருது விழாவில் நிறுவனமும் விருதைப் பெற்றுக்கொண்டது. கருவி நிறுவனத்தின் சார்பில் செயலாளர் து.ஜெசிந்தன் மற்றும் பொருளாளர் ஜோன் கிளேடியஸ் ஆகியோர் விருதைப் பெற்றுக் கொண்டனர். (ஒ-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குதிரை வலு 85 இற்கும் அதிகம் கொண்ட டெர்போ என்ஜின் காரணமாக அதிக வினைத்திறன்மிக்க எரிபொருள் சிக்கனமான

விரிவான டிரக் தொகுதி மற்றும் நிலத்திலிருந்து உயரம் அதிகமென்பதால் எந்தவொரு சேற்றிலும் இறுகாமல் இலகுவாக கையாளக்கூடிய வசதி

விழுந்த நெற்கதிர்களை இலகுவாக பொறுக்கி எடுத்து வெட்டக்கூடிய வசதி

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கியர் தொகுதி காரணமாக வேகத்தில் அறுவடை செய்யக்கூடிய திறன்

அதிக கொள்ளளவு கொண்ட தானிய தொட்டி

விற்பனையின் பின்னரான விசேட சேவை

சிறப்பான ஜப்பான் தொழிநுட்பம் மற்றும் தனித்தன்மை வாய்ந்த யன்மார் உத்தரவாதம்

அசல் யன்மார் உதிரிப்பாகங்கள்

விலை ரூபா 7,999,000 இலிருந்து நிபந்தனைகளுக்குட்பட்டது.

0761 831 343 - சிந்துஜன் | 0772 842 433 - நிஷாகரன் | 0773 457 988 - துஷான்

Browns Agriculture

(CR 36113)1-6



## மன்னாரில் தொடர் மழை: 319 குடும்பங்கள் பாதிப்பு

மன்னார்,டிசெ.2

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக, மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 319 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 146 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தலைமன்னார் கிராமத்தில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேரும், சௌத்பாரில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேரும், எழுத்தூரில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேரும், எமில் நகர்ப் பகுதியில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 183 பேரும், பேசாலை மேற்கில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேரும், பேசாலை தெற்குப் பகுதியில் 36 குடும்பங்களைச் சேர்ந்த 123 பேரும், தலை மன்னார் ஸ்ரேஸனில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 130 பேரும், துள்ளுக்குடியிருப்பில் 56 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேரும், ஓலைத்தொடுவாயில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 118 பேரும், தோட்டவெளியில் 37 குடும்பங்களைச் சேர்ந்த 123 பேரும், பெரிய கரிசலில் 3குடும்பங்களைச் சேர்ந்த 15 பேரும், சிறுத்தோப்பில் 31 குடும்பங்களைச் சேர்ந்த 113 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அத்தியாவசிய உதவிகளை இடர் முகாமைத்துவப் பிரிவு, பிரதேச செயலகத்துடன் இணைந்து கிராம அலுவலர்கள் முன்னெடுத் துள்ளனர்.

(ஓ-4-56)

# ஒமிக்ரோன் திரிபு வைரஸ் மன்னாரில் பரிசோதனை



மன்னார்,டிசெ.2

**ஒமிக்ரோன் திரிபு வைரஸ் தொடர்பில், பி.சி.ஆர். மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்காக அனுப்பப்படும் என்று - மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினமும் புதிதாக 15 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 2 உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

நவம்பர் மாதம் 25 டெங்குத் தொற்றாளர்களும், 540 கொரோனாத் தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் தற்போது வரை 2 ஆயிரத்து 933 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேதுடன் 28 கொரோனா உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த மாதம் உயிரிழந்த ஐவரில் இருவர் எந்தவித தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஏனைய இருவர் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று, 3 மாதங்கள் கழிந்துள்ளன.

அதேவேளை மாவட்டத்தில் டெங்குத் தொற்றும் அதிகரித்துள்ளது.

2021ஆம் ஆண்டில் தற்போது வரை 54 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே காய்ச்சல் ஏற்படும் போது சுய சிகிச்சைகளை செய்து கொள்ளாமல், உடனடியாக மருத்துவமனைகளுக்குச்சென்று பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். காய்ச்சலை தணிப்பதற்காக எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எம்.எஸ்.ஏ.ஐ.டி. என்ற வகையைச் சேர்ந்த மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டாம்.

தற்போது சர்வதேச அளவில் கரிசனையை செலுத்தி உள்ள 'ஒமிக்ரோன்' என்ற திரிபுடைய வைரஸ் இலங்கையிலும் பரவி உள்ளதா என்பதற்கான தொடர் பரிசோதனைகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக வடமாகாணத்தில் மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் எதிர்வரும் மாதத்தில் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்காக அனுப்பப்படும். டிசெம்பர் மாதம் பண்டிகைக் காலம் என்பதால் பொதுமக்கள் அதிக அளவில் ஒன்று கூடும் சந்தர்ப்பம் உள்ளது.

எனவே பொதுமக்கள் ஒன்றுகூடும் நிலைமைகளைத் தவிர்த்து, சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும் - என்றார்.

(ஓ-4-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒமிக்ரோன் மீதான அச்சத்தால் தனிமைப்படுத்திவிடவேண்டாம்

## உலக நாடுகளிடம் தென்னாபிரிக்கா மன்றாட்டம்

**ஜோகன்ஸ்பார்க், டிசெ. 2**

**அதிக அபாயம் மிக்கதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஒமிக்ரோன் திரிபு காரணமாக எம்மைத் தனிமைப்படுத்தி விடவேண்டாம். இந்தப் பெருந்தொற்றில் இருந்து மீண்டுவரு வதற்கான அனைத்து வழிவகைகளையும் நாம் முன்னெடுப் போம். உலக நாடுகளும் எமக்கு சகல வழிகளிலும் பேருதவி புரிய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது தென்னாபி ரிக்கா.**

ஒமிக்ரோன் வைரஸ் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர், தென்னாபிரிக்காவைத் தனி மைப்படுத்தி தம்மைத் தற்காத்துக்கொள் ளும் முயற்சியில் உலக நாடுகள் தீவி ரமாக ஈடுபட்டு வருகின்றன. அமெ ரிக்கா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, கனடா, ஐரோப்பிய நாடுகள், இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் தென்னாபிரிக்காவுக் குச் செல்வதையும் தென்னாபிரிக்கா வில் இருந்து வருவதையும் தடைசெய் துள்ளன. இன்னும் பல நாடுகள் தென்னா பிரிக்காவுக்குப் பயணத்தடை விதிப்ப தைப் பரிசீலித்து வருகின்றன. இந்த நிலையிலேயே இவ்வாறான கோரிக் கையை விடுத்துள்ளது தென்னாபிரிக்கா.

இது தொடர்பில் தென்னாபிரிக்க வெளி விவகார அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள் ளதாவது:

ஒமிக்ரோன் வைரஸ் தென்னாபிரிக்கா வுடன் சமீபத்திய தொடர்புகளைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்கா வுக்குப் பிறகு, இஸ்ரேலும் - பெல்ஜிய மும் ஒமிக்ரோன் வைரஸைக் கண்டறிந் ததாக அறிவித்துள்ளன. அந்த நாடுக ளுக்கான எதிர்வினை தென்னாபிரிக் காவில் உள்ள வைரஸ் என மையப்ப டுத்திக் கூறப்படுகிறது.

தென்னாபிரிக்காவின் சோதனைத் திறன் மற்றும் உலகத் தரம் வாய்ந்த அறிவியல் சமூகத்தால் அங்கீகரிக்கப் படுகிறது. தொற்றுநோயைக் கட்டுப்படுத் துவதில் உலக நாடுகளைப் போலவே நாங்களும் சிறந்த முறையில் முன்னு தாரணமாக இருந்தோம். அதிகளவு தடுப்பூசி செலுத்தி வருகிறோம். எங்கள் நாட்டில் இதுபோன்ற புதிய வைரஸ் இருப்பதையும் அறிவித்தோம். எங் களின் இந்த நடவடிக்கையைப் பாராட்ட வேண்டும், தண்டிக்கக்கூடாது.

உலகின் பிற பகுதிகளில் புதிய மாறுபாடு கொண்ட கொரோனா வைரஸ்கள் கண் டுபிடிக்கப்பட்டுள்ளன. இதையாரும் மறந்து விடக்கூடாது. அந்த வைரஸ் ஒவ்வொன்றும் தென்னாபிரிக்காவுடன் சமீபத்திய தொடர்புகளைக் கொண்டிருக் கவில்லை. இதையும் உலக சமூகம் மனதில் கொள்ள வேண்டும் - என்றுள் ளது. (ம)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
15
03
1950



விண்ணில்
02
10
2021

**அமரர் வேலுப்பிள்ளை செல்வி சரோஜினிதேவி**

நிழலாய் இருந்தவரே - நினைவாய் மாறினீர்களே
அமைதியாய் உறங்குகின்றீர் என எண்ணிய எம்மை
மீளாத் துயில் கொண்டு ஆறாத் துயரில்
ஆழ்த்தியது ஏனோ.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

என்றும் நினைவழியா
உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 0777110523

(es.41349) (2.6)

# தன்னைத் தானே திருமணம் செய்த அழகி விவாகரத்து



பிரேஸிலை சேர்ந்த மொடல் அழகியான கிறிஸ் கலேரா கடந்த செப்டெம்பர் மாதம் தன்னைத்தானே திருமணம் செய்து கொண்டு பரபரப்பு ஏற்படுத்தினார்.

31 வயதான இவர் கடந்த காலங்களில் உறவு முறிவுகளால் ஏற்பட்ட விரக்தி காரண மாக பிரபல கத்தோலிக்க தேவாலயத்தில் தன்னை தானே திருமணம் செய்துகொண் டார். இந்நிலையில் திருமணம் செய்து 3 மாதங்கள் ஆகவுள்ள நிலையில் தற்போது தன்னைத் தானே விவாகரத்து செய்யவுள் ளதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து மனம் திறந்த அவர் "எனக்கு இப்போது காதல் மீது நம்பிக்கை வந்துவிட் டது. காதல் என்றால் என்ன என்று தெரிந்து கொண்டேன், என்னுடைய கனவு மனிதரை சந்தித்துவிட்டேன்.

அவரை பார்த்தபிறகுதான் இந்த நம்பிக்கை எனக்குள் வந்தது. அதனால், நான் என் னைத் திருமணம் செய்து கொண்டதை விவாகரத்து செய்கிறேன்" என்று கூறியுள்ளார். (ச)

# நாளை உருவாகும் புயலின் பெயர் 'ஜாவத்'

தெற்கு தாய்லாந்து மற்றும் அதனையொட்டிய கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவா கின்றது.



இது தெற்கு அந்தமான் கடல் பகுதிக்கு நகர்ந்து காற்ற முத்த தாழ்வுப் பகுதியாக மாறி நாளை புயலாக மாற வாய்ப்பு உள்ளது. ஜாவத் புயல் காரணமாக தமிழகத்தில் மீண்டும் கனமழைக்கு வாய்ப்பு இல்லை என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பொது வாழ்வில் உங்களின் புகழ் கூடும். உடல் ஆரோக்கியம் சீரா கும். வாழ்வில் பல அனுபவம் பெற்ற வர்களை சந்திப்பீர்கள். நெருங்கிய நண்பர்கள் நல்ல செய்தியை தரு வார்கள்.

**இடபம்:** கூடுதலாக வருமானம் வருவதற்கு முயற்சி செய்வீர்கள். தடைகளை சமாளித்து வெற்றி காண் பீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த சிரமங்கள் ஒவ்வொன்றாய் நீங்கும்.

**மிதுனம்:** உங்களின் மனக்குழப்பம் அகலும். செலவு குறைந்து நிம்மதி வரும். உழைப்பால் பலன் உண்டு. நல்ல செய்தி வரும் நாள். எதிரிகள் விலகுவர்.

**கடகம்:** குடும்பத்தில் குதூகலம் கூடும். உழைப்பால் உயர்வீர்கள். எந்த விஷயத்தையும் சுறுசுறுப்பாக செய்து முடிப்பீர்கள். வெளிநாட்டில் இருந்து தொலைபேசி வழியாக வரும் செய்தி மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** பணத்தேவைகள் நிறை வேறும். குடும்பத்தினருடன் இருந்த வாக்குவாதம் தீரும். உங்களுக்கு தொல்லை கொடுத்தவர்கள் விலகுவர். கலை ஆர்வம் வரும். அனுகூலச்செய்தி வந்து சேரும். கவலை ஒன்று தீரும்.

**கன்னி:** நண்பர்களால் நல்ல விஷயம் ஒன்று நிறைவேறும் நாள். உங்களின் புகழ் கூடும். புதிய முயற்சி ஒன்று [illegible] லாபம் சுமாராகத்தான் இருக்கும்.

**துலாம்:** அதிகமாக உழைத்துப் பல னும் கூடுதலாகப் பெறுவீர்கள். ஒன் றுக்கு மேற்பட்ட இனங்களில் வருமானம் வந்து மகிழ்விக்கும். பிறர் மீது கருணை வைத்து அவர்களுக்கு உதவி செய் வீர்கள்.

**விருச்சிகம்:** மன உறுதியோடு செயற் பட்டு பிறரை ஆச்சரியப்பட வைப் பீர்கள். இன்று வரும் செய்தி உங்க ளது தொழிலுக்கு துணை புரியும். வாழ்வில் முன்னேற உதவும் பொருள் [illegible] வாங்குவீர்கள்.

**தனுசு:** துணிச்சலோடு செயல்பட்டு தொல்லையில் இருந்து [illegible] உங்களின் திட்டங்களை [illegible] வெற்றி கொள்வீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலையை உரு வாக்குவீர்கள்.

**மகரம்:** இனிய சம்பவங்கள் நடை பெறும். நண்பர்கள் சந்திப்பு உண்டு. குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் இருந்த பயம் தீரும்.

**கும்பம்:** சகபணியாளர்களின் ஒத்து ழைப்பு கிடைப்பதால் நிம்மதி வரும். நீண்ட நாள் ஆசைகளில் ஒன்று எதிர் பாராத வகையில் இன்று நிறைவேறும். வழக்கு சாதகமாகும். சேமிப்பில் ஆர்வம் கொள்வீர்கள்.

**மீனம்:** கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். பணிபுரியும் இடத்தில் மற்றவர்களை [illegible] சரித்துச் செல்லவும். குடும்ப பிரச்சினைகள் முடி வுக்கு வருவது உங்கள் கையில்தான் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் குவியும் போதைப்பொருள்கள்

## பல குடும்பங்கள் பாதிப்பு

மன்னார், டிசெ.2

**மன்னார் நகருக்குள் கடல் வழியாக போதைப்பொருள்கள் கடத்தப்பட்டுவரும் நிலையில், மன்னார் பாலத்தடியில் சோதனைச் சாவடி அமைத்து என்ன பயன் என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

மன்னார் ஒரு தீவு. கடல் வழியாகவே மன்னாருக்குள் போதைப் பொருள்கள் கொண்டு வரப்படுகின்றன.

எனவே கடல் வழிப் பாதுகாப்பை அதிகரிக்காமல், மன்னார் பெரிய பாலத்தடியில் சோதனைச் சாவடிகள் அமைத்து, மக்களைத் துன்புறுத்துவதில் பயன் இல்லை என்று மன்னார் நகரசபை உறுப்பினர் நடேஸ்வர வடிவுக்கரசி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னாரில் தற்போது போதைப்பொருள் வியாபாரத்தில் மேல்மட்டத்தில் பிரதான சூத்திரதாரியாக இருப்பவர்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அடி மட்டத்தில் உள்ள சிப்பந்திகள் மட்டுமே கைது செய்யப்படுகின்றனர். மன்னாரில் வறுமை உருவாவதற்கு மூல காரணமாக சில இடங்களில் போதைப்பொருள் பழக்கமே காணப்படுகின்றது.

அதேவேளை மன்னார் பாலத்தடியில் சோதனை செய்யப்படுவதால், பலர் மன அழுத்தத்துக்கு ஆளாகி விடுகின்றனர். ஒவ்வொருநாளும் ஒவ்வொருநிமிடமும் பிள்ளைகள் வெளியில் செல்லும் வேளைகளில் போதைப்பொருளுக்கு அடிமையாகி விடுவார்களோ என்று பயந்து கொண்டிருக்கின்றோம். ஒவ்வொருநாளும் இரவில் பெண்கள் நித்திரை கொள்ள முடியாமல் இருக்கின்றது. வீடு வீடாகச் சென்று சோதனை செய்கின்றனர். ஒரு சிலர் தவறு செய்வதால் பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே மன்னார் பாலத்தடியில் சோதனை செய்வதை நிறுத்திவிட்டு போதைப்பொருள் வியாபாரத்தில் யார் பிரதான குற்றவாளியாக இருக்கிறார்களோ அவர்களைப் பிடித்து உரிய தண்டனையை வழங்குங்கள் -என்றார். (ஒ-4-213)

> **“மன்னார் பாலத்தடியில் சோதனை செய்வதை நிறுத்திவிட்டு போதைப் பொருள் வியாபாரத்தில் யார் பிரதான குற்றவாளியாக இருக்கிறார்களோ அவர்களைப் பிடித்து உரிய தண்டனையை வழங்குங்கள்”**



## கொடையாளிகளை உதவுமாறு கோரிக்கை

32 வயதில், இரு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் எதிர்காலம் பற்றிய எண்ணற்ற கனவுகளோடு உயிர்வாழப் போராடும் இளம் குடும்பஸ்தரின் உயிர்காக்க நிதி வழங்கி உதவுமாறு அந்தக் குடும்பத்தலைவரின் மனைவி கருணையுள்ளம் கொண்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி - புதுமுறிப்பு பாடசாலை முன் வீதியைச் சேர்ந்த செபஸ்தியான்பிள்ளை தேவராசா என்பவரே பாதிக்கப்பட்டுள்ளார்.

ஒன்றரை வயது பூர்த்தியாகியுள்ள தனது பிள்ளைக்காகவேனும் உயிர் காக்க உதவுங்கள் என்று மனைவி கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார். அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு 45 இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது என்றும் மனைவி கூறியுள்ளார். அவருடைய மக்கள் வங்கிக் கணக்கு இலக்கம் 04820039001 8363, அலைபேசி இலக்கம் 0765335356/ 0774293115. (த-இ)

## மின்தடை

யாழ்ப்பாணம், டிசெ.2

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.மாவட்டத்தில் எஸ்.எஸ். கட்டடம், கல்லூரி வீதி, தம்பசிட்டி, கிராமக்கோடு, பருத்தித்துறை இலங்கை போக்குவரத்துச்சபை, பருத்தித்துறை சந்தை, சாலம்பை, சாரையடி, சிவன், தம்பசிட்டி சந்தி, வி.எம். வீதி, விஸ்வகுல வீதி ஆகிய இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில் கற்கடந்தகுளம், குருக்களூர் மன்னார் வீதி, குருக்கள் புதுக்குளம் மணியர்குளம் ஆகிய பிரதேசங்களிலும்,

நாளை 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா மாவட்டத்திலும் மின்சாரம் தடைப்படவுள்ளது என இலங்கை மின்சார சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



முல்லைத்தீவு, முள்ளியவளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு அமெரிக்காவில் வசிக்கும் பாலமயூரன் மணிமேகலா தம்பதியின் நிதியில், 30 மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஒ-ரி-125)

## பொருள்கள் வழங்கல்

முல்லைத்தீவு, டிசெ.2

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பாடசாலைகள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான வினோநோகராதலிங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில்,புதுக்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான அலுவலக தளபாடங்களும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான போட்டோ கொப்பி இயந்திரமும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதனின் நிதி ஒதுக்கீட்டில் புதுக்குடியிருப்பு மேற்கு வேணாவில் முருகானந்தா வித்தியாலயத்துக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகள் மற்றும் மோட்டர் ஆகியவையும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டன.

பொருள்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களின் இணைப்பாளர்களான முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உபதவிசாளர் க.ஜெனமேஜெயந்தும் வழங்கி வைத்தனர். (ஒ-ரி-19)



## கல்வெட்டு உடைப்பு: போக்குவரத்து தடை

மன்னார், டிசெ.2

தலைமன்னார் ஏ-14 பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருந்த கல்வெட்டு உடைந்தமையால் போக்குவரத்துத் தடைபட்டுள்ளது. இதனையடுத்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை தற்காலிகமாக போக்குவரத்தைச் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

பேசாலை கிராமத்தில் கடுமையான மழையினும். இளைஞர்கள் வாய்க்கால்களை வெட்டி நீரைக் கடலுக்கள் வெளியேற்றுவதற்கான முயற்சியை [illegible] இரவாக மேற்கொண்ட போதும் 75 வீதமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அத்துடன் கடும் மழை மற்றும் வேகமான நீரோட்டத் [illegible] பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருந்த கல்வெட்டு உடைந்துள்ளது.



இதனையடுத்து மன்னார் மாவட்டச் செயலர் திருமதி. ஸ்ரான்லி டிமெல், மன்னார் பிரதேச செயலர் எம். பிரதீபன், மன்னார் இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் திலீபன் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்டதுடன், உடனடியாக போக்குவரத்தை சீர்செய்யுமாறு [illegible] அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தனர். (ஒ-4-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நினைவேந்தல் இராணுவம் அடாவடி

## மாநகர சபையில் கண்டனம்

**யாழ்ப்பாணம், டிசெ.2**

**மாவீரர் நினைவேந்தலை முன்னிட்டு, பொதுமக்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த இராணுவத்தினருக்கு எதிராக யாழ்.மாநகர சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

நினைவேந்தலுக்கு நீதிமன்றம் தடைவிதிக்காத போதும், இராணுவம் மற்றும் பொலிஸார் நினைவு கூருபவர்களை அச்சுறுத்தி, தடைசெய்ய முற்பட்டமை மற்றும் முள்ளிவாய்க்காலில் ஊடகவியலாளர் தாக்கப்பட்டமை உள்ளிட்ட சம்பவங்களைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சபை அமர்வில், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினர் ஜெயக்குமார் ராஜீவ்காந்தால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. (ஒ-47)



## சிலிண்டர்கள் வெடிப்பு ஐ.ம.சக்தி முறைப்பாடு

கொழும்பு, டிசெ.2

எரிவாயு சிலிண்டர்கள் வெடித்தமை மற்றும் அவற்றின் கலவை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்குழு, நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் முறையிட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவிக்கையில்;

எரிவாயு பற்றாக்குறையை நிவர்த்தி செய்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக, இன்று எரிவாயு தாங்கிகளின் கலவை தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

விரைவில் எரிவாயு சிலிண்டர்கள் தீருகின்றன என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். மறுபுறம், நாடு முழுவதும் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கின்றன.

நாட்டில் 40வீத மக்கள் எரிவாயுவைப் பயன்படுத்துகின்றனர். இதனால் மக்கள் அனைவரும் இன்று பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே கலவை மற்றும் தரம் குறித்து விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளோம். தரமற்ற எரிவாயு சிலிண்டர்களை சந்தையில் இருந்து அகற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தோம். தேசிய பாதுகாப்பை வழங்குவதாக பெருமை கூறிக்கொண்டு பதவிக்கு வந்த அரசால் இன்று சமையலறை வேலைகளை மேற்கொள்ள மக்கள் அச்சப்படுகின்றனர். இது தொடர்பாக உரிய விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகின்றோம். என்றார். (ஒ-4)

## வெடி விபத்தில் சிக்கியவருக்கு தொடர் சிகிச்சை

முல்லைத்தீவு,டிசெ.2

வெடிபொருள் வெடித்து காயமடைந்த குடும்பஸ்தர் தொடர்ந்தும் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த 24 ஆம் திகதியன்று சுதந்திரபுரம் கொலனிப் பகுதியில் வயல் வேலை செய்து கொண்டிருந்த வேளை, மண்வெட்டியால் நிலத்தில் வெட்டிய போது, நிலத்தில் புதைந்திருந்த வெடிபொருள் வெடித்தது.

அதில் அதே பகுதியைச் சேர்ந்த (வயது 32) குடும்பஸ்தர் ஒருவர் காலில் காயமடைந்த நிலையில், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-4-19)

## வலி.வடக்கு பிரதேச சபை 2022 பட்ஜெட் நிறைவேற்றம்



யாழ்ப்பாணம், டிசெ.2

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம், தவிசாளார் சோ.சுகிர்தனால் நேற்றுமுன்தினம் சபையில் முன்வைக்கப்பட்டது.

39 உறுப்பினர்களைக் கொண்ட சபையின் அமர்வில் கலந்துகொண்ட 29 உறுப்பினர்களும் வரவு - செலவு திட்டத்துக்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 17 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 8 உறுப்பினர்களும், அகில இலங்கைத் தமிழ்த் காங்கிரஸின் 6 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா 2 உறுப்பினர்களும் சபையில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது (ஒ-4-20)

## தீ விபத்தில் சிறுமி சாவு

கொழும்பு, டிசெ.2

வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் 8 வயதான சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மாத்தறை வெலிகமப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்தது.

வீட்டில் அறையின் மேற்கூரை சரிந்து, அறைக்குள் உறங்கிக் கொண்டிருந்த சிறுமிமீது விழுந்துள்ளது.

இந்தத் தீ விபத்தின்போது அருகிலிருந்த அறையில் சிறுமியின் பாட்டி மற்றும் 13 வயதுச் சகோதரி ஆகியோர் உயிர் தப்பியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். (ஒ-4)

## எரிவாயுக் கசிவால் விபத்துக்கள்: இவ்வாரம் பகுப்பாய்வு அறிக்கை

கொழும்பு, டிசெ.2

எரிவாயுக் கசிவால் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பான தரப் பகுப்பாய்வு அறிக்கை, இந்த வாரத்துக்குள் கையளிக்கப்படும் என்று மொறட்டுவ பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

வீட்டுச் சமையல் எரிவாயு சிலிண்டர்களில் ஏற்பட்ட கசிவுகள் தொடர்பான வெடிப்புக்களைத் தொடர்ந்து,

நுகர்வோர் விவகார அதிகாரசபை, 6 மாவட்டங்களில் இருந்து எரிவாயு மாதிரிகளை பரிசோதனைக்காக [illegible] பெற்றுள்ளது.

இவற்றில் 12 மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக மொறட்டுவ பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பில் உணவகம் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தை அடுத்து இந்தப் பிரச்சினை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அரச பகுப்பாய்வாளரின் ஆய்வுகளைத் தொடர்ந்து, வெடிப்புக்கான மூல காரணம் எரிவாயுக் கசிவு என்பது தெரியவந்தது.

இந்த [illegible] நிறுவனங்களே காரணம் என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு சிலிண்டர்களின் புறொபேன் மற்றும் பியூட்டேன் வீதத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இதேவேளை எரிவாயுக்கசிவுடன் தொடர்புடைய 16 வெடிப்புச் சம்பவங்கள் இதுவரை பதிவாகியுள்ளன [illegible] என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-4)

## வீதி புனரமைப்பு தொடர்பாக பிரதேச சபைக்கு கோரிக்கை

வட்டுக்கோட்டை, டிசெ.2

வட்டுக்கோட்டை மூளாய் வீதியைப் புனரமைத்துத் தருமாறு வலி.மேற்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியில் மக்கள் அதிகமாகப் போக்குவரத்துப் பயணம் மேற்கொள்கின்றனர். அத்துடன் இந்த வீதியில் அடிக்கடி விபத்து ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். இதனால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். எனவே இந்த வீதியை விரைவாக புனரமைப்புச் செய்து தருமாறு வலி.மேற்கு பிரதேச சபைக்கு, வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் [illegible] கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி அதிகாரப்பத்திரத்தை இரத்து செய்தல்

குமாரு ஆறுமுகம் ஆகிய நான் 05.06.2012 அன்று திகதியிட்டு குமாரசாமி தவராஜசிங்கம் என்பவருக்கு கனகபுரம் கிளிநொச்சியில் உள்ள எனது காணி உறுதி இலக்கம் J/G/KOC/2904 க்கு வழங்கப்பட்ட அதிகாரப் பத்திரத்தை (Power of Attoney) இன்று முதல் இரத்து செய்கிறேன்.

(cs.41373) (2.6)

குமாரு ஆறுமுகம்

## வேலையாட்கள் தேவை

யாழில் பிரபல சைவ உணவகம் ஒன்றிற்கு உடனடியாக வேலை யாட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
1). உணவு பரிமாறுபவர் Waiter
2). சமையல் உதவியாளர்
3) கிளீனர் (சுத்தம் செய்பவர்)

தொடர்புகட்கு: **0777 112 269**

(CS 723) 1-6


# பொது அறிவித்தல் - 2022
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதனவரி | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 2022ம் ஆண்டுக்கான ஆதனவரி சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களுக்கான மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமதியின் 14% ஆகவும் ஏழாலை உப அலுவலகத்திற்கான ஆதனவரி வருடாந்த பெறுமதியின் 15% ஆகவும் அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2022ம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2022ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்தவரியில் 10% கழிவினைக் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டுற்குமுரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டுவரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியை செலுத்ததவறின் விறாந்துக்கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதனவரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதனவரிகளை 31.01.2022ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 02 | ஆதனப் பதி வேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் | பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03 | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டத்தின் கீழ் கட்டட அனுமதிவழங்கல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்டபொதுமக்கள் மற்றும் அரசதனியார் நிறுவனங்கள் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள், முட்கம்பித்தூண் அமைப்பதாயின் அல்லது பழையகட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேசசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதிபெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்<br>2. புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒருவருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரியகட்டணம் செலுத்திகட்டட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டதும் பிரதேசசபை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரியகட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்றுஅமைத்தல் வேண்டும்.<br>5. அனுமதியற்ற கட்டடங்களை முறைப்படுத்தி சீர்செய்கை நடவடிக்கைக்கான தண்டப்பணம் 1597/8 ஆம் இலக்க 2009.04.17 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகை பகுதி I தொகுதி (I) பொது அட்டவணை V இன் மேவுதல் அங்கீகாரங்கள் பிரகாரம் அறவீடு செய்யப்படும்<br>6. 2235/54 ஆம் இலக்க 2021.07.08 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அதிவிசேஷ வர்த்தமானப்பத்திரிகை பகுதி I தொகுதி (I) இன் பிரகாரம் அங்கீகாரங்கள் வழங்கப்படும் |
| | | | பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர அலங்கார அமைப்புக்கள் அமைத்தல் முற்றாகதடைசெய்யப்பட்டுள்ளது. |
| 04 | காணி உப பிரிவிடுகை | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளல் வேண்டும். |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000ஆம் அண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/22ஆம் இலக்க அதிவிசேடவர்த்தமானியில் "இ"பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபாரநடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பபடிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரியகட்டணத்தைச் செலுத்திசூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். |
| 06 | வியாபார அனுமதிப்பத்திரம் 2022 | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை உடுவில், சுன்னாகம், ஏழாலை ஆகிய உப அலுவலகங்களில் 2022ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்திஉரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2022 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளவும். 31.03.2022ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளாதவர்கள் மீதுசட்டநடவடிக்கை எடுக்கப்படும். |
| 07 | துவிச்சக்கர வண்டி உரிமம் | துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கரவண்டிகள் வைத்திருப்போர் 2022.03.31 ஆம் திகதிக்குமுன் உரிய உப அலுவலகங்களில் உரியகட்டணங்களை செலுத்தி 2022ம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 08 | மிருகங்களுக் கான உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்புநாய்கள் வைத்திருப்போர் 2022.03.31ஆம் திகதிக்குமுன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி பதிவுசெய்து 2022 ஆம் ஆண்டுக்கான மிருகஉரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும் |
| 09 | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப் படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேசசபைஎல்லைக்குள்அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்குபிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்தவேண்டும். அனுமதிபெறப்படாதவிளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். கட்டணவிபரம் பின்வருமாறு (கீழே உள்ள அட்டவணை) |
| 10 | வீதிஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள் | வீதி ஒழுங்கைப்பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனைசெய்வது, காட்சிப்படுத்துவது தடைசெய்யப் பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தகநிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, முட்டை என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 11 | பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையங்கள் | உணவுகையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதிபெற்றிருத்தல் வேண்டும். |
| | | | 2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 12 | பொது இடங்களில் கழிவு போடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும் | பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகளை பிரதேசசபைக்கு ஒப்படைக்கும்போது அவை தரம்பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் முற்றாக தடைசெய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| | | | அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படல் வேண்டும் |
| | | | பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் பூமரங்கள் நாட்டுதல் முற்றாக தடைசெய்யப் பட்டுள்ளது. |
| 13 | படவரைஞர்களை பதிவு செய்தல் | படவரைஞர்கள் | 2022ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2022ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்/ புதுப்பித்துக்கொள்ளவும் மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலகநேரத்தில் தொடர்புகொள்ளவும். |
| 14 | தரகர் முறைநீக்கல் | சந்தைக் குத்தகையாளர்கள் | எமது பிரதேச சபைஎல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப் பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக்குத்தகையாளர் வேண்ட[illegible]ப்படுகின்றனர். |

(09 – கட்டணவிபரம்)

| தொ இல | விபரம் | கட்டணம் (1சதுர அடி) |
|---|---|---|
| 1 | சுவர் ஒன்றில் அல்லது மதில் ஒன்றில், பலகை ஒன்றில் அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் (தகரீம்,பிலெக்ஸ், லுமினஸ்) அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் காட்சிக்கு வைக்கப்படுகின்ற நிரந்தர விளம்பர அறிவித்தல் | 100 00 |
| 2 | ஒருமாதத்திற்கு மேல் 03 மாதங்களுக்கு குறைவான காலஎல்லைக்கு காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | 30 00 |
| 3 | ஒரு மாதத்திற்கு அல்லது அதற்கு குறைவாகக்காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | 20 00 |
| 4 | கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு கூடுதலான கால எல்லை | 40 00 |
| 5 | கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லை | 30 00 |
| 6 | வர்த்தகநிலையங்களுக்குள் காட்சிக்கு வைக்கப்படுகின்ற தனது வர்த்தகநாமத்தை உடைய வர்த்தகபெயர்பலகை தவிர்ந்த வேறு பெயர்ப்பலகை | 100.00 |
| 7 | டிஜிடல் பெயர்ப்பலகை | 150 00 |
| 8 | ஒளிபுக கூடியவிளம்பரம் | 150.00 |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. [illegible] அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்.
[illegible]
0212240017/0212244045

(CR 36110)1-6

## நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம், நவ.2

16 வயதுக்கு மேற்பட்ட இளையோருக்கு தொழில் வாய்ப்புக்கான நேர்முகத்தேர்வு நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டம் மற்றும் வெளி மாவட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனங்களில் பல்வேறுபட்ட வேலைக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த வாய்ப்பை இளையோருக்கு வழங்குவதாக யாழ் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

கணக்காளர், நிதி நிறுவன உத்தியோகத்தர்கள், ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள், தாதியர்கள், கட்டுமானப் பணியாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மேசன், தச்சுத் தொழிலாளி, பிளம்பர், பெயின்ரர், காசாளர், சேவை உதவியாளர், விற்பனை மேலாளர், விற்பனைமுகவர், பாதுகாப்பு சேவை பணியாளர்கள், உற்பத்தி தொழிற்சாலைப் பணியாளர்கள், காப்புறுதிப் பணியாளர்கள் ஆகிய வெற்றிடங்களுக்கான நேர்முகத் தேர்வுகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளன. தங்களுக்கான நேர்முகத்தேர்வுத் தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்களை யாழ்.மாவட்டத் தொழில் நிலையத்துக்கு நேரடியாகச் சென்று பெற்றுக்கொள்ளலாம் என்றும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு 021 2219 359 என்ற மாவட்டத் தொழில் நிலையத் தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளலாம் என்றும் மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஒ-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரிசு நிலத்தின் தங்கம்!



■ க.பிரியங்கா
விவசாயபீடம்

தரிசு நிலத்தின் தங்கம் எனப்படும் முந்திரி அல்லது மர முந்திரி அதிக அளவில் அந்நிய செலவாணியை ஈட்டிக்கொடுத்து, கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தியுள்ள பயிராகும். மரமுந்திரி பிரேசிலிலிருந்து இலங்கைக்கு 16ஆம் நூற்றாண்டில் போர்துக்கேயரால் அறிமுகப்படத்தப்பட்டது.

மரமுந்திரியில் முந்திரிப்பழமென அழைப்பது உண்மையில் பழமல்ல. அது போலிப்பழம் எனவும் அழைக்கப்படும். இது பூவின் சூலகப் பகுதியில் இருந்து உருவாவதில்லை. பூவின் அடிப்பகுதியில் உள்ள தடித்த பூக்காம்புப் பகுதியே இவ்வாறு பேரிக்காய் உருவத்தில் விருத்தியடைகின்றது.

## முந்திரியின் பயன்கள்

வறுக்கப்பட்ட முந்திரிக்கொட்டைகள் உலகில் பலராலும் விரும்பி உண்ணப்படுவதுடன், கறி சமைக்கவும், ருசியைச் சேர்ப்பதற்காக இனிப்பு வகை உணவுகளுடன் சேர்க்கப்பட்டும் பயன்படுத்தப்படுகின்றன.

சிற்றுணவான முந்திரிப் பருப்பு, ஐஸ் கிரீம், கேக், மிட்டாய் வகைகளைத் தயாரிக்கப் பயன்படுகிறது. இதில் புரதம் மிகுந்தும் சர்க்கரை குறைந்தும் உள்ளதால், ஊட்ட உணவுகளிலும் முக்கிய மூலப்பொருளாகப் பயன்படுகிறது. பிரேசிலில், முந்திரிப்பழம் கஜுனா என்ற பானம் தயாரிக்கப் பயன்படுகின்றது. இது மருத்துவப் பண்புகளைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. முந்திரி பழத்தின் கஜு கொட்டையின் ஓடுகளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. இது மரங்களை பூச்சி, நுண்ணங்கி தாக்கத்தில் இருந்து பாதுகாப்பதாக கூறப்படுகிறது.

முந்திரிக்கொட்டையைச் சூழவுள்ள கடினமான இரட்டை ஒடு ஒவ்வாமையை உருவாக்கக் கூடிய, தோலில் நமைச்சலைத் தரக்கூடிய சில பதார்த்தங்களைக் கொண்டுள்ளது. சரியான முறையில் வறுத்து பதப்படுத்தப்படும் போது, இந்தப் பதார்த்தங்கள் சில அழிவடைந்துவிடும். ஆனாலும் பதப்படுத்தலின்போது மூடிய அறைக்குள் அதன் புகை வெளியேறுமாயின் நுரையீரலுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம். எனவே அவதானத்துடன் செய்யப்பட வேண்டும்.

## வளரும் முக்கிய பகுதிகள்

இந்த மரமானது இன்று வெப்பமண்டல நாடுகள் பலவற்றில் வளர்க்கப்படுகிறது. வியட்நாம், நைஜீரியா, இந்தியா, பிரேசில், இந்தோனேசியா ஆகிய நாடுகளில் அதிகம் பயிரிடப்படுகிறது. இலங்கையில் சாகுபடியின் முக்கிய பகுதிகள் புத்தளம், குருநாகல், மட்டக்களப்பு, அனுராதபுரம், மன்னார் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகும். நீண்ட காலத்துக்கு ஈரப்பத அழுத்தத்தை பொறுத்துக்கொள்ளும் தன்மை காரணமாக வறண்ட பகுதிகளில் வளரும் திறன் உள்ளது. புத்தளம், கமண்டலுவா, ஹார்டி, மிரிஜ்ஜவில், மாங்கர்னி, கொண்டச்சி ஆகியவை இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான முந்திரி தோட்டங்கள்.

வளம் குன்றிய மண்ணில் முந்திரி வளரும் என்றாலும், நல்ல மண்ணில் அதன் வளர்ச்சியும் விருத்தியும் சிறப்பாக இருக்கும். நல்ல வடிகால் வசதி கொண்ட செம்மண் பாங்கான நிலத்தில் நன்கு வளரும் தன்மை கொண்டது. அத்துடன் மணல் மண்ணில் செழித்து வளர்கிறது. இருப்பினும் இதில் தாதுப் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. மோசமான வடிகால் கொண்ட கனமான களிமண் முந்திரி சாகுபடிக்கு ஏற்றது அல்ல.

மேலும் அதிகப்படியான கார மற்றும் உப்பு மண்ணும் அதன் வளர்ச்சியை ஆதரிக்காது. சிவப்பு மணல் களிமண் மற்றும் கரையோர மணல்கள் முந்திரிக்கு சிறந்தது. அதிகப்படியான மழை மற்றும் அதிக ஈரப்பதம் என்பன சாகுபடியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

## வகைகள்

WUCC 1, WUCC 23, WUCC 5, WUCC 8, WUCC 9, WUCC 13, WUCC 19, WUCC 21 என்றவாறாக மர முந்திரிகையின் இனங்கள் அமைகின்றன. இவை பல்வேறு காலகட்டங்களில் இலங்கைக்கு அறிமுகப் படுத்தப்பட்டவை. எனினும் பெரும்பாலான இனங்கள் வருடத்துக்கு 10 கிலோகிராம் விளைச்சலைத் தரவல்லவையாகவே அமைந்துள்ளன. பழங்களின் நிறங்கள், பராமரிப்பு முறை என்பவற்றில் சிற்சில வேறுபாடுகள் காணப்படவே செய்கின்றன.

## உற்பத்தி முறை

80க்கும் அதிகமானவை விதைகள் மூலமே உற்பத்தி செய்யப்படுகின்றன. இது ஒரு அயன் மகரந்தச் சேர்க்கை அடையும் பயிராக இருப்பதால், விதைகள் மூலம் உருவாக்கப்பட்டும் மகட் தாவரங்கள் விளைச்சல், கஜுவின் அளவு, ஆப்பிள் நிறம் மற்றும் வேறு பல அம்சங்களில் தாய்த் தவாரத்திலிருந்து மாறுபடுவதற்கு சாத்தியமுண்டு.

விதைகளைச் சேகரிக்கும் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட விரும்பத்தக்க சிறப்பியல்புகளை கொண்ட தாய் மரங்களிலிருந்து சேகரித்தல் வேண்டும். விளைச்சல், கஜுவின் அளவு மற்றும் பிற அம்சங்களில் உள்ள மாறுபாட்டைக் குறைக்க பின்வரும் இனப்பெருக்க முறைகளான காற்றுக்குரிய பதிவைத்தல், ஒட்டுதல் பரிந்துரைக்கப்படுகின்றன. எனினும் காற்றுக்குரிய பதிவைத்தலில் மகட்தாவரங்கள் உயிர்வாழும் சதவீதம் குறைவாகவும், ஆயுள் குறைவாகவும் காணப்படுவதுடன் தொழிநுட்பத்தின் மூலம் உருவாக்கப்படும் தாவரங்கள் குறைந்தளவில் வறட்சிக்கு தாக்குபிடிக்கின்றன,

முந்திரி ஒட்டுக்கட்டும் முறையில் 'இளம் தண்டு ஒட்டு முறை' மிகவும் சிறந்தது. அதிக மகசூலைக் கொடுக்க வல்லது. இதன் மூலம் உருவாக்கப்பட தாவரங்கள் 56 மாதங்களில் நடுவதற்கு தயாராக இருக்கும். நாற்று மேடை ஓகஸ்ட் செப்ரெம்பர் மாதங்களிலும், மே ஜூன் மாதங்களிலும் மேற்கொள்ளப்படுகிறது.

| ஊரவகை | அளவு (g/ year/ plant) | | | | |
|---|---|---|---|---|---|
| | 1st | 2nd | 3rd | 4th | 5th |
| யூரியா (g) | 76 | 133 | 190 | 247 | 304 |
| பாறைபொஸ்பேட் (g) | 94 | 165 | 235 | 306 | 376 |
| MOP– பொட்டாசியம் | 30 | 52 | 75 | 97 | 120 |
| உரக்கலவை | 200 | 350 | 500 | 650 | 800 |

ஒட்டுக்கன்றுகளின் பயன்களாக, குறுகிய காலத்தில் காய்ப்புக்கு வருதல், அதிக விளைச்சல், சீராகக் காய்க்கும் திறன், தரமான காய்கள், அடர் அடவுமுறை, பாதுகாக்க இலகு, கவ்வாத்து மற்றும் வடிவமைத்தல் எளிது ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

## உரமிடும் முறை

உரமிடும் நிலத்தின் அளவு தாவரத்தின் விதா னத்தைப் பொறுத்து மாறும். இளம்மரக்கன்றுகளுக்கு உரக்கலவை மண்ணுடன் கலந்து தாவரத்திலிருந்து அரை மீற்றர் தொடக்கம் ஒரு மீற்றர் ஆரையுடைய வட்டத்தினுள் வழங்கல் வேண்டும். 2 தொடக்கம் 5 வருடம் உள்ள கன்றுகளுக்கு உரமானது மரத்தின் அரை மீற்றர் தொடக்கம் ஒரு மீற்றர் ஆரையுடைய வட்டத்தினுள் வழங்கல் வேண்டும். 5 வருடத்திற்கு மேல் உரமானது மரத்திலிருந்து ஒரு மீற்றர் தொடக்கம் ஒன்றரை மீற்றர் வரைக்கு அப்பால் விசிறப்படுதல் வேண்டும்.

## நீர் முகாமைத்துவம்

பெரும்பாலும் இது மழை மூலமே தனது நீர்த் தேவையை பூர்த்தி செய்து கொள்ளும். எனினும் நீர் வழங்கப்படுமாயின் விளைச்சல் இரட்டிப்பாகும். முக்கியமாக கன்றுகள் வளர்ந்து வரும் காலப்பகுதியில் நீர் வழங்குதல் முக்கியமானது. காய் பிடிக்கும் தருணத்திலும் பூக்கள் பூக்கும் தருணத்திலும் வறட்சியான சிதோஸ்ண நிலை நிலவினால் காய் பிடிப்பு அதிகரிக்கும். முந்திரியை பொதுவாக மானாவாரியாக பயிர் செய்யலாம்.

தற்போது நிலத்தின் நீர் இழப்பை குறைப்பதற்காக மூடு பயிர்கள், இலைச்சருகுகளை மேற்பரப்பில் இடுதல், தென்னையின் பொச்சுக்களினை அடுக்குகளாக அமைக்கும் புதிய தொழில்நுட்ப உத்திகள் கையாளப்படுகின்றன. பொதுவாக 3 4 அடுக்குகளில் தென்னையின் பொச்சுகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி மண்ணினையும் கலந்து நிலத்தின் ஈரப்பதனை பாதுகாக்கலாம்.

## மரமுந்திரிகைக்கான பீடைக்கட்டுப்பாடு

வேர்த்தண்டு துளைப்பான் அறிகுறி : பிசின்கள், எச்சங்கள் வெளியேறுதல் இலைகள் மஞ்சள் நிறமாதல், கடும் தாக்கமெனில் மரம் முழுமையாக இறக்கும்.

கட்டுப்படுதல் :

1. பிரதான தண்டுப்பகுதியில் 1 1.5 மீற்றர் வரை வாகனங்களில் பாவித்த ஒயிலோ, தாரையோ பூசுதல் வேண்டும்.
2. இறந்த தாவரத்திலிருந்து பூச்சிகளை அதன் பாகங்களை அகற்றுதல்
3. வேர் பகுதிக்கும் பாதிக்கப்பட்ட இடத்திற்கும் பட்டையை அகற்றுதல்.

## கட்டுப்படுத்தல்

1. மாற்று விருந்து வழங்கி மரங்களான முருங்கை, வேம்பு நடுதல்
2. நோய்வாய்ப்பட்ட கிளைகளை அகளல்
3. புகைமூட்டி பூச்சியை விரட்டுதல்
4. தளிர்கள், இலைகள் வளரும்போது காபரில் சரியான அளவில் விசிறுதல் (முக்கியமாக இவ் இரசாயனங்களினால் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பூச்சிகளுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு. எனவே சரியான நேரத்திலும் அளவிலும் விசிறுதல் வேண்டும்)

மகரந்தச் சேர்க்கையை உறுதிப்படுத்த தற்போது தேனீக்கள் மரமுந்திரிகை தோட்டத்திலேயே வளர்க்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான உத்திகளை கையாண்டால் மரமுந்திரியில் கூடியளவு விளைச்சலைப் பெற்று இலாபம் அடைதல் உறுதியாகும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிக்கையின்....

மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. விசாரணை அறிக்கையின் ஊடாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று, யாழ். மாவட்டச்செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

எரிவாயு அடுப்புகள் மற்றும் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிவாயு அடுப்புகள் வெடித்துச் சிதறியமை தொடர்பில் இன்று(நேற்று) வரை மூன்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

முதலில் கந்தரோடை அதன் பின்னர் வட்டுக்கோட்டை மற்றும் அராலிப் பகுதிகளிலேயே இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் ஊடாக குறித்த சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடந்தவார இறுதியில் கோரியிருந்தோம்.

அவர்கள் விசாரணை மேற்கொண்டபோது பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைமைப்பீடம் இந்த விடயங்களை, அதாவது எரிவாயு அடுப்பு வெடித்தல் சம்பவங்களை அந்தந்த பிரதேச பொலிஸ் நிலையங்களின் ஊடாக விசாரணை செய்து அதனை சமர்ப்பிக்குமாறு அறிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினையை தேசிய மட்டப் பிரச்சினையாகவே கருத வேண்டும். எனவே பாவனையாளர்கள் எச்சரிக்கையாக இந்த விடயத்தைக் கையாள வேண்டும் - என்று தெரிவித்தார். (த-27)

## முல்லை.....

தெரிவித்துள்ள இராணுவத் தலைமையகம், ஊடகவியலாளர் மீது படையினர் தாக்குதல் நடத்தவில்லை எனவும் கூறியுள்ளது.

இலங்கை இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள விளக்க அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில்,

முல்லைத்தீவைச் சேர்ந்த சுதந்திர ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஷ்வச்சந்திரன் மீது படையினர் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதல் குறித்து இலங்கை இராணுவம் மற்றும் அதன் இராணுவ காவல்துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இராணுவத் தளபதியின் அறிவுறுத்தல்களுக்கமைய மேற்படி சம்பவம் இடம்பெற்ற சில மணித்தியாலங்களில் அந்த இடத்தில் கடமையாற்றிய 682 படைப்பிரிவு படையினரிடம் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு சமூக ஊடக தளங்கள் மற்றும் நாட்டின் சில அச்சு ஊடகங்கள் என்பன இந்த சம்பவம் தொடர்பாக சரிபார்க்கப்படாத, உறுதிப்படுத்தப்படாத மிகைப்படுத்தப்பட்ட மற்றும் உண்மைக்கும் புறம்பான தகவல்களை வெளியிட்டன.

உண்மையில், படை வீரர் ஒருவர், முள்ளிவாய்க்கால் பெயர்ப் பலகையுடன் இணைந்ததாக இராணுவத்தினரை ஏன் படம் பிடிக்கிறீர்கள் என ஊடகவியலாளரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்வாறு கேள்வி எழுப்பியவாறு அந்த இராணுவ வீரர் குறிப்பிட்ட ஊடகவியலாளரை நோக்கிச் செல்லமுற்பட்டதும், அவர் அந்த படைவீரர்களுடன் கதைத்தவாறு பின்னோக்கிச் சென்றுள்ளார். இவ்வாறு பின்னோக்கிச் சென்றவேளை, திடீரென்று பெயர்ப் பலகையில் இருந்து சில மீற்றர் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்த தனது சொந்த மோட்டார் சைக்கிளின் மீது மோதி, கம்பி வேலி பொருத்தப்பட்டிருந்த இடத்தில் வீழ்ந்தார். சேற்று நிலப்பகுதியில் வீழ்ந்த அவரது கைகள் 'காயமடைந்து' இருப்பதை அவதானித்தார்.

இவர் இவ்வாறு விபத்துக்குள்ளாகி காயமடைந்த சில நொடிகளில், அவரது கையடக்க தொலைபேசியின் ஊடாக தகவல் கொடுக்கப்பட, செய்தியை எதிர்பார்த்துக் காத்திருந்த பல குழுக்கள் வீடியோ கமராக்கள் மற்றும் தொலைபேசிகளுடன் சம்பவ இடத்துக்குவந்து, காயமடைந்த நபரை பாசாங்குத்தனமாக அந்த இடத்தில் படுக்கச் செய்துள்ளன - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

## சிவாச்சாரியார்...

உயிரிழந்தார்.

அவர், சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து மருத்துவமனையின் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்று வந்தநிலையில், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

அவர் யோகாசன கலைஞராகவும், ஜோதிட வல்லுநராகவும் திகழ்ந்தார்.

அவரது உடல், சுகாதார நடைமுறைகளுக்கு அமைய பூந்தோட்டம் இந்து மயானத்தில் நேற்று தகனம் செய்யப்பட்டது. (த-110)

## வயோதிபர் மீது யானை தாக்குதல்

வீதியால் சென்ற வயோதிபரைக் காட்டு யானை தாக்கியது. இந்தச் சம்பவம் ஒட்டுசுட்டான், கூழாமுறிப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. கூழாமுறிப்பிலிருந்து கெருடமடு செல்லும் வீதியால் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது காட்டு யானை தாக்கியுள்ளது. யானை துவிச்சக்கர வண்டியைத் தூக்கி வீசியபோது முதியவரும் தூக்கி வீசப்பட்டுள்ளார். (ஓ-4-19)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபா
077 334 1281

## வேலையாள்கள் தேவை

- வரவேற்பாளர் - பெண்
- மணவறை அலங்கார வடிவமைப்பாளர் - பெண்

முன் அனுபவம் தேவையில்லை
077 777 1723

## தேவை

நல்லூர் பிரதேச சபைக்குள் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள பெண் உதவியாளர் ஒருவர் தேவை.
(முழுநேரமாக வேலை செய்ய கூடியவர்கள்)
077 950 7546
(CS 41372)(2:6)


## அகமகிழ்ந்து நன்றி தெரிவிக்கின்றோம்

பூநகரி பிரதேச பாடசாலைகளான கிளி/பூநகரி மகாவித்தியாலயம், கிளி/செல்லையாதீவு அ.த.க. பாடசாலை, கிளி/பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம், கிளி/முக்கொம்பன் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கற்பிக்கும் யாழ் மாவட்ட ஆசிரியர்களாகிய நாம் நீண்டகாலமாக பாடசாலை செல்வதற்கான முறையான அரச போக்குவரத்து சேவையின்றி தவித்த வேளையில் எமது கோரிக்கையை ஏற்று மூளாயிலிருந்து - சுழிபுரம் - சித்தன்கேணி - சங்கானை - சண்டிலிப்பாய் - மானிப்பாய் - உடுவில் - மருதனார் மடம் - சுன்னாகம் - மருதனார் மடம் - உரும்பிராய் - கோப்பாய் - கைதடி - சாவகச்சேரி - தனங்களப்பு - பூநகரி ஊடாக முக்கொம்பன் வரையான ஓர் அரச பேருந்து சேவையை ஏற்படுத்தித்தந்த

**கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**
**(கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சு)**



அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். அமைச்சரது பணிப்புரைக்கு அமைவாக இப்பேருந்து சேவையின் வழித்தட ஒழுங்கு, நேர ஒழுங்கு என்பவற்றை முறையாக ஏற்படுத்திக் கொடுத்த ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் **யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு.சி.பாலகிருஷ்ணன் (ஜீவன்)** அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றியுடன்,
**இப்பேருந்து சேவை மூலம் பயன்பெறும் ஆசிரியர்கள்.**

(CS 726)1-6

## அன்புத் தெய்வங்களின் நினைவேந்தல்

8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி





தோற்றம் 06.11.1931 — மறைவு 01.10.2013

**அமரர் ஐயம்பிள்ளை நடராசா**
(ஸ்ரீ ஜெயா ரான்ஸ்போட் உரிமையாளர்)
திதி: துவாதசி

தோற்றம் 19.07.1933 — மறைவு 12.12.2020

**அமரர் நடராசா பாக்கியம்**
திதி: திரயோதசி

அன்பால் உறவுகளை அரவணைத்து நல்வழிகாட்டிய தெய்வங்கள்
அன்புடனும் பண்புடனும் பரிவோடும் எம்மை
வழிநடத்திய எங்கள் குலவிளக்குகள்
நீங்கள் இல்லாத இவ் உலகம் என்றும் எமக்கு இருள்மயமானது.

இனி எங்கே நாம் காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
கால் நூற்றாண்டு கடந்தாலும் தீராது உங்கள் பிரிவின் வலி
மண்ணோடு மறையும் காலம் வரை எம்
நெஞ்சோடு சுமக்கும் உங்கள் நினைவுகள்

வானுறையும் தெய்வ சந்நிதியில் உங்கள் ஆன்ம ஈடேற்றம் பெற
இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(cs.719) (2.6)

## மரண அறிவித்தல்



தோற்றம்
22 . 07 . 1946

மறைவு
01 . 12 . 2021

**முருகேசு அருள்பிரகாசம்**
**(முன்னாள் ஓய்வுநிலை நூலக உத்தியோகஸ்தர் யாழ். பல்கலைக் கழகம்)**

மாகியம்பதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அருள்பிரகாசம் 01.12.2021 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சாமுவேல்-புலோமினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், அருள்வதனனின் (சமுர்த்தி உத்தியோகத்தர்- பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற டொரின்மேரியின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், குணப்பிரகாசம் மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சபீஷன் (யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை), ரிஷாநாத் (யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை), நிபோஷன் (யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**தொ.இல:077 6450304**

(CS 41380) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி....

அளவிடுவதனைத் தடுக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு மக்களின் காணிகளைப் பாதுகாக்க தொடர்ந்து போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், மாதகலில் மக்களின் காணிகளை படைகளுக்குத் தாரைவார்க்கும் நோக்கில், நேற்றுமுன்தினம் அரச அலுவலர்கள் மக்களின் காணியை அளவீடு செய்யவிருந்த நிலையில் மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் ஆர்ப்பாட்டம் நடத்தி தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இந்தநிலையிலேயே, அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் இடையூறு விளைவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டியேற்படும் என்று வடக்கு ஆளுநர் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் ஆளுநர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி, பொருளாதார, சமூக மேம்பாடு உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டசட்டதிட்டங்களுக்கு அமைவாகஅரச அதிகாரிகள் காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார்கள்.

ஆனால், அண்மைய நாள்களில் மாதகல் உள்ளிட்ட இடங்களில் அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு இடையூறுகள் விளைவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மக்கள் பிரதிநிதிகள் இந்த விடயத்தில் தலையீடு செய்துள்ளனர்.

காணி அளவீடுகளை மேற்கொள்வதில் அவர்களுக்கு கரிசனைகள் காணப்படுமாயின், அது தொடர்பில் கலந்துரையாட நான் எப்போதுமே தயாராகவே உள்ளேன்.

அவ்வாறிருக்கையில், அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்துகின்றமை பொருத்தமற்ற செயற்பாடுகளாகும்.

இத்தகைய நிலைமைகள் தொடருமாக இருந்தால் வடக்கு மாகாணத்தின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயங்கப்போவதில்லை - என்று ஆளுநர் தெரிவித்தார். (த-இ)

## காணி சுவீகரிப்பை....

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாதகல் காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டு காணி அளவீடு செய்யும் நடவடிக்கைகளுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

"நிலத்தை பறிப்பதும் எம் உயிரைப் பறிப்பதும் ஒன்றே, எமது நிலம் எமக்கு வேண்டும், காணிகளை சுவீகரிக்காதே, ஆளுநரே! காணி அபகரிப்புக்கு உடந்தையாகாதே" போன்ற பல்வேறு கோஷங்கள் எழுப்பியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது, அங்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (த)

## சந்திப்பு....

வடக்கு மாகாண ஆளுநர் காணி உரிமையாளர்களை சந்திக்கவுள்ளார் என்று - வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகத்தால் காணி உரிமையாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இந்தநிலையிலேயே, திடீரென அந்த சந்திப்பு நிறுத்தப்பட்டது என்றும் நாளை (இன்று) காலை 8 மணிக்கு குறித்த சந்திப்பு நடைபெறும் என்றும் ஒரு சில காணி உரிமையாளர்களுக்கு பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காணி உரிமையாளர்கள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேரடியாகச்சென்று கேட்டபொழுது, இந்தச் சந்திப்பு தொடர்பில் தமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்றும் இந்தச் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டது தொடர்பாகவோ நாளை(இன்று) இந்தச் சந்திப்பு நடைபெறும் என்பது தொடர்பாகவோ தமக்கு எதுவும் தெரியாது என்றும் ஆளுநரின் செயலர் கூறினார் என்று மக்கள் தெரிவித்தனர்.

இதனால், தூர இடங்களிலிருந்து வந்த பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-125)

## புலிகளின்....

தஸ்துள்ள இரண்டு அமைச்சர்களின் இரண்டு செயலாளர்களிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போரின்போது தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் தங்கத்தை, குறித்த இருவரும் சட்டவிரோதமான முறையில் பெற்றுக்கொள்ள முயற்சித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், செயலாளர்கள் இருவரின் சட்டவிரோதமான நடவடிக்கைகள் தொடர்பில் பொதுப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனையடுத்து, பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிவித்தலின் பிரகாரம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

## தலைமன்னார்....

யில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர் என 50 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்போதே கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டது.

பாடசாலை மாணவர் ஒருவருக்கு தலைமன்னார் மருத்துவமனையில் ஏற்கனவே தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், அந்த மாணவனுடன் தொடர்புடைய ஏனைய மாணவர்கள் மற்றும் பெற்றோர் என 50 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் போதே அந்த 15 பேருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அதனையடுத்து, மாணவர்களுடன் தொடர்புடைய மாணவர்களை வீடுகளில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (த-56)

## டொலருக்கு....

டொலருக்கும் தலா 10 ரூபாவை மேலதிகமாகப் பெற்றுக்கொள்ள முடியுமென மத்திய வங்கி அறிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்காக இந்த சலுகை வழங்கப்படுவதாகவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்த மாதத்திலிருந்து இந்தச் சலுகை ஆரம்பமாவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## பிரதேசசபை....

நம் காணியை குத்தகைக்கு எடுத்து பராமரித்துவந்த நிலையில் அங்கு அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வீட்டில் அவரது நடமாட்டமில்லாததை அவதானித்த அயல் வீட்டுக்காரர், வீட்டை எட்டிப் பார்த்தபோது துர்நாற்றம் வீசியுள்ளது. இதனையடுத்து உடனடியாக சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

இவர் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ரெலோ சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-4,159,27,125)

## கோவிலில்....

மும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமாவில் பகுதியில் உள்ள கோவில் ஒன்றில் கடந்த 21ஆம் திகதி 4 லட்சம் ரூபா பணம் மற்றும் பொருள்கள் திருட்டுப் போயிருந்தன.

அது தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அத்துடன், சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப் பிள்ளையார் கோவிலில் கடந்த 22ஆம் திகதி 20 ஆயிரம் ரூபா பணம் திருட்டுப் போயிருந்தது.

அதுதொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

குறித்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்தநிலையிலேயே, நாவற்குழியைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். அவருடன் சேர்ந்திருந்த ஒருவர் தப்பிச்சென்றுள்ளார். அவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-26)

## இன்று....

யுதவியுடன் மறுசீரமைக்கப்பட்ட ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் இன்று வியாழக்கிழமை மாலை. 5.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக தியாகேந்திரன் அர்ச்சுனா, செல்வி நிலாஜினி தியாகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் இசைக்கலைஞர்களுக்கான மதிப்பளிப்பு இடம்பெறவுள்ளது. குமரன் பஞ்சமூர்த்தி குழுவினரின் நாதசங்கம், வாண வேடிக்கைகள், தண்ணீர் விசிறல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்று யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார். (ஓ-5)

## தொற்று....

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 64 ஆயிரத்து 733 ஆக எகிறியுள்ளது. அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 396 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 40 ஆயிரத்து 783 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை,

மேலும் 26 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர். நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 15 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 372 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## நேற்றும்....

வங்கள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை மேற்கு காளி கோவில் பகுதியில் நேற்று மதியம் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துச் சிதறியுள்ளது.

வீட்டில் காலை உணவுகளை சமைத்துவிட்டு வீட்டிலிருந்து உரையாடிக்கொண்டிருந்தபோது வெடிப்புச் சத்தம் கேட்டதாகவும் சென்று பார்த்தபோது அடுப்பு வெடித்துகிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எரிவாயு சிலிண்டர் வெளிப்புறம் இருந்ததால் பெரும் இடர் தவிர்க்கப்பட்டதாகவும் வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து குறித்த இடத்துக்கு வந்த எரிவாயு விநியோகஸ்தர்கள் நிலைமையை பார்வையிட்டுச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறே, அராலி நாகேந்திரா அம்மன் கோவில் பகுதியில் இரண்டு வீடுகளில் நேற்று எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியது.

இந்தச்சம்பவத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட எரிவாயு அடுப்பே வெடித்துச் சிதறியுள்ளது.

எனினும் வேறு சேதங்கள் எவையும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் நிலைமையை பார்வையிட்டுச் சென்றனர்.

சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியதாகவும் எனினும், எவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் அந்த வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை, நுவரெலியா - நானுஓயா நகரில் உள்ள மதுபானம் விற்பனை நிலையம் ஒன்றின் சமையல் அறையில் பயன்படுத்தப்பட்ட சிலிண்டர் நேற்றுமுதினம் வெடித்துள்ளது.

எரிவாயு சிலிண்டரை அடுப்புடன் இணைக்கும்போது அது வெடித்துள்ளது. இதுதவிர, புத்தளம் மற்றும் தலவாக்கலை பகுதிகளிலும் சிலிண்டர் வெடித்துச்சிதறிய சம்பவங்கள் நேற்று இடம்பெற்றுள்ளன.

நாளாந்தம் சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் அதிகரித்துச்செல்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-319,27,125)

## இளம்....

விக்கப்பட்டது. இதேபகுதியைச் சேர்ந்த இராமையா இராமஜெயம் என்பவரே உயிரிழந்தார்.

நண்பர்களுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதம் நேற்று முன்தினம் கைகலப்பாகியதில் அவர்களில் ஒருவரான மேற்படி குடும்பஸ்தர் படுகாயமடைந்தார் என்று ஆரம்ப விசாரணையில் பொலிஸார் கூறினர்.

படுகாயமடைந்தநபர், நோயாளர் காவுவண்டி மூலமாக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

அவருடைய சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (த-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 17 . 08 . 1928



இறைவன் அடியில் 02 . 11 . 2021

## அமரர் கார்த்திகேசு சின்னத்துரை பகவான்

(ஓய்வு நிலை ஆசிரியர் / அதிபர்)


அன்பின் தந்தையே! மாமாவே! அப்பப்பாவே! அம்மப்பாவே!
குடும்பத்தின் பேரொளியே
நீங்கள் எமைப்பிரிந்து தொலைவு சென்று
முப்பத்தொரு நாள்கள் ஆனதோ
முப்பத்தொரு நாள்கள் அல்ல பல வாயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
நீங்கள் விட்டுச்சென்ற நினைவலைகள் - என்றும்
எம்மை விட்டு அகலாது அப்பா! மாமா! அப்பப்பா! அம்மப்பா!

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

cs.41379) (2.6)

# சபிண்டீகரண அழைப்பு



கடந்த 23.11.2021 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் சிவஸ்ரீ சின்னசாமிக்குருக்கள் செல்வராசாக்குருக்கள் (காந்திஐயா)

(அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய மூத்த
பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.12.2021) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவிலும். நாளை (03.12.2021) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் சபிண்டீகரணமும் மதியபோசனமும் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

140, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(வீரமாகாளியம்மன் ஆலயம்)

குடும்பத்தினர்

(cs 41375 (2.6)

# நன்றி நவிலல்



உரும்பிராய் ஸ்ரீகருணாகரப்பிள்ளையார் ஆதீனகர்த்தா

## ஸ்வர்கீயஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் சபாரத்தினக்குருக்கள்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எம்முடன் துயர்பகிர்ந்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும் தொலைபேசி, முகநூல் வாயிலாக ஆறுதல் கூறியோருக்கும், பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அனைத்து ஆலயம்சார் சபையினருக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியோருக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டோருக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், தசாஹாதி கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், தானாதிகளில் பங்கேற்ற விப்ர சிரேஷ்டர்களுக்கும், 24.11.2021 புதன்கிழமையன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்து கொண்டோருக்கும், 01.12.2021 புதன்கிழமை நேற்றைய தினம் பம்பலப்பிட்டி A.V.S ஹோலில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும், உணவு பானாதிகள் வழங்கிய அன்பு இதயங்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


ஸ்ரீகருணாகரப்பிள்ளையார் கோவிலடி,
உரும்பிராய் மேற்கு.
119/1 W.A.சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை

குடும்பத்தினர்

(CS 41367) (6.2)

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 01 . 1930



மறைவு 01 . 12 . 2021

## நாகநாதர் கந்தசாமி

தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் கந்தசாமி நேற்று (01.12.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேதநாயகியின் அன்புக் கணவரும், அன்னபூரணி, வேலாயுதபிள்ளை, காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் செல்லபூரணி, சரவணமுத்து, ஆனந்தராசா, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயதேவி, ஜெயகௌரி, ஜெயராம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசேகரம், குலராஜா, ஸ்ரீதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் அரவிந்தன், பிரதீபா, ஜெயப்பிரகாஷ், பிரசாந், பிரியந்தினி, சுதாகர், நர்மிதா, மயூரன், உமேஷ், ரம்யா, சௌம்யா ஆகியோரின் அன்புப் பேரனும் திவ்யன், மதுரனின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2021) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தெல்லிப்பழை கொத்தியாழ் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

ஜெயராம் - 004 993 428 57832,
004 917 344 91232
ஜெயதேவி - 077 918 4456
ஜெயகௌரி - 004 970 421 2584
004 915 211 222766

ஜெயராமின் இல்லம்
தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

(cs 41371) (2:6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர்
## இராஜேஸ்வரி கணேசமூர்த்தி

தோற்றம்
26.06.1947

மறைவு
03.11.2021



" கம்பீர நடையும் மிடுக்கு பேச்சும்
வசீகர வதனமும் புன்சிரிப்பும்
வெளுத்த இதயமும் கொண்ட
பாசத்தின் பிறப்பிடமே !

" அன்பால் பண்பால் நட்பால்
உரிமையுடன் அனைவரையும் ஆர அரவணைத்த
ஆளுமையின் உறைவிடமே தன்னம்பிக்கையின் இருப்பிடமே!

இவ் வையத்துள் சிறப்புற வாழ்வாங்கு
வாழ்ந்து இன்று தெய்வத்துள் உள்ளுறையும்
எங்கள் குடும்பத்து இதய குலவிளக்கே!
கண்ணிமைக்கும் நொடியினிலே காலன்
தலையழைத்து இன்றுடன் தினங்கள்
முப்பத்தொன்று ஆகிவிட்டாலும்,
உங்கள் வழிகாட்டல்களால் வாழும்
குடும்பத்துக்கு தெய்வமாக விண்ணில் இருந்து வழிகாட்டி
ஆசீர்வதிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் வாழ்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் மறைவு செய்தி கேட்டு உடனே ஓடோடி வந்து ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும், சமூக வலைத் தளங்களினூடாகவும் மற்றும் பல்வேறு வழிகளிலும் துயரத்தில் பங்குகொண்டு அனுதாபம் தெரிவித்து ஆத்மா சாந்தி யடைய பிரார்த்தித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்கள் குடும்பத்தினர் சார்பாக எமது சிரம்தாழ்த்தி நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மயூரபதி அம்மனை வேண்டி நிற்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.